# ஜெயில்

## ...கட்டுரைகள்...

ப. ராமஸ்வாமி

செ. திவான் M.A., M.Phil.,
சுஹைறா பதிப்பகம்
106 F,4A- திருவனந்தபுரம் ரோடு,
பாளையங்கோட்டை-627 002.
Phone: 0462 - 2572665



தமிழ்ச் சுடர் நிலையம்
...ஜார்ஜ் டவுன். சென்னை...

தமிழ்ச்சுடர் நிலைய வெளியீடு

# ஜெயில்

[கட்டுரைகள்]

ஆசிரியர்

ப. ராமஸ்வாமி

செ. திவான் M.A., M.Phil.,
சுஹைறா பதிப்பகம்
106 F,4A- திருவனந்தபுரம் ரோடு,
பாளையங்கோட்டை-627 002.
Phone: 0462-2572665

கிடைக்குமிடம் :

கமலா பிரசுராலயம்

59, பிராட்வே :: சென்னை

# உள்ளடக்கம்.

★


1. ஜெயில்.
2. தீவாந்தரம்.
3. இலங்கையில்
   இந்தியத் தொழிலாளர்.
4. அஞ்சா நெஞ்சம் படைத்த
   ஆசிரியர் பரம்பரை.
5. தேசிய மறுமலர்ச்சி.


★

விலை ரூ. 1 8 0



ஆசிரியர் ப. ராமஸ்வாமி

திருநெல்வேலி

நண்பர்களுக்கு—

இந்தப் புத்தகத்திலுள்ள ஐந்து கட்டுரைகளும் வெவ்வேறு காலத்தில் எழுதப்பட்டவை. எனினும், இவைகளுக்குள் நெருங்கிய தொடர்பு உண்டு.

இதில் கூறப்பட்டிருக்கும் கருத்துக்களில் சில மிகவும் புரட்சிகரமானவை என்று யாரும் அஞ்ச வேண்டியதில்லை. ஏனெனில், இவைகளைப் பார்க்கிலும் புரட்சிகரமான கருத்துக்களை உடையவர்கள் பலர் இருக்கின்றனர்.

புரட்சி என்பதுதான் என்ன? வளர்ச்சி ஆமை வேகத்தில் ஊர ஆரம்பித்தால், உடனே புரட்சி தோன்றாமல் முடியாது. புரட்சி என்பது ஜதி, வளர்ச்சி என்பது நடனம். புரட்சிகள் ஆகிய பல ஜதிகள் சேர்ந்து வளர்ச்சி என்ற நடனமாகப் பூர்த்தியாகின்றன.

சொற்கள் பூதங்களாம். அவைகள் மனித ரத்தத்தைக் குடித்த பிறகே அரிய பெரிய காரியங்களை எல்லாம் சாதிக்க முடியுமாம்.

என்னுடைய சொற்கள் சம்பந்தமாக உண்மையைச் சொல்லிவிடுகிறேன். இவைகள் பல வருஷங்களாக உள்ளத்தில் கிடந்து என் உதிரத்தைக் குடித்து வந்தன என்பதில் ஐயமில்லை. ஆனால், கிடைக்கிற வரையில் குடித்துவிட்டு, இப்பொழுது நான் ஏவிய வேலைகளை இவைகள் சாதிக்குமோ என்னவோ, தெரியவில்லை. அதைப்பற்றி எனக்கு கவலையும் இல்லை. இனி அது நீங்களும் என் சொற்களும் சம்பந்தப்பட்ட விஷயம்.

ப. ரா.

செ. திவான் M.A., M.Phil.,
சுஹைறா பதிப்பகம்
106 F,4A- திருவனந்தபுரம் ரோடு,
பாளையங்கோட்டை - 627 002
Phone: 0462 - 2572665
TIRUNELVELI MUNICIPAL
Public Library & Reading Roo
TIRUNELVELI JUNCTION.

# 1. ஜெயில்

'பெரிய திருடர்கள் எல்லோரும் வெளியே உல்லாசமாக இருக்கிறார்கள்; சின்னத் திருடர்களாகிய நாங்கள்தான் உள்ளே அகப்பட்டுக்கொண்டு திண்டாடுகிறோம்!' என்று கைதிகள் சொல்வது வழக்கம். இதில் மிகுந்த உண்மை இருப்பதை நாம் அறிவோம். ஆயினும், ஏற்றுக் கொள்வதில்லை. திருடத் தெரியாமல் திருடியவர்களே நம் கையில் சிக்குகிறார்கள். மற்றக் குற்றவாளிகளும் இப்படித்தான் மாட்டிக்கொள்கிறார்கள்.

நாள்தோறும் புரட்டும் உருட்டுமே தொழிலாய்க் கொண்ட 'நாகரிக புருஷர்கள்' பலர் டிராம்களிலும், கார்களிலும், ரயில்களிலும் சுற்றி வருவதை நாம் பார்க்காத இடம் இருக்கிறதா? பொய்க்கும் பித்தலாட்டத்திற்கும் தாயகமாக இருக்கும் வியாபாரிகள் எத்தனை பேர்! ஏழை ஜனங்களுக்குக் கடன் கொடுத்துக் கொள்ளை லாபம் சம்பாதிப்பவர் எத்தனை பேர்! கொழுத்த சம்பளத்துடன் சமூகத்தின் 'ஊழியர்க'ளாக இருக்கும் அதிகாரிகளில் லஞ்சம் வாங்காதவர் எத்தனை பேர்! கீழ்க் கோர்ட்டு, மேல் கோர்ட்டு, ஹைகோர்ட்டு என்ற பல நீதிசபைகளிலும் வழக்காடும் மக்களுக்கு நீதியை வாங்கிக் கொடுப்பதற்கு 'பீஸ்கள்' வாங்கும் வக்கீல்களும், பிணிகளால் வாடித் தவிக்கும் ஏழை ஜனங்கள் தம்முடனே வாழும் ஜந்துக்கள் என்ற உணர்ச்சியே இல்லாமல், கொடிய 'பீஸ்களை' வசூலிக்கும்

டாக்டர்களும் — எல்லோரும் குற்றமற்ற நிரபராதிகளா? நாம் எல்லோருமே குற்றமற்றவர்களாக இருக்கிறோமா? இருக்கத்தான் முடியுமா? நம்மைச் சூழ்ந்துள்ள நிலைமைகளால் நாம் பாதிக்கப்படாமல் தப்பியிருக்க முடியுமா?

சமூகம் முழுவதுமே உயர்ந்த ஒழுக்க நிலையில் இருந்தால்தான் மக்கள் பலரிடமும் அந்த நிலைமையை எதிர்பார்க்க முடியும். பொய் பேசத் தெரியாத வக்கீலுக்கு ஒரு சமூகத்தில் பிழைக்க வழி இல்லை யென்றால், அது அந்தச் சமூகத்தின் லட்சணத்தையே காட்டுகிறது. அத்தகைய சமூகத்திலுள்ளவர்கள், பொய்யும் புரட்டும், திருட்டும் உருட்டும், கொடுமையும் தண்டனையும் நிறைந்த ஒரு விஷமச் சக்கரத்துக்குள்ளேயே உழன்றுகொண் டிருப்பார்கள். தப்பி வெளியேற அவர்களுக்கு வழி தெரியாமற் போய்விடும். இதுவே ஜெயிலுக்குள்ளே இருக்கும் நம்மவர்களும், வெளியேயுள்ள நாமும் இன்று இருக்கிற நிலைமை.

சிறை, சிறைச்சாலை, காராக்ருகம் என்ற சொற்களுக் குப் பதிலாக இப்பொழுது ‘ஜெயில்’ என்ற ஆங்கிலச் சொல்லே தமிழில் வந்துவிட்டது. இலங்கையிலுள்ள தமிழர் ஜெயிலை ‘மறியல்—வீடு’ என்று சொல்லு கின்றனர். ஜெயிலுக்குரிய பெயர்கள் எப்பொழுது ஏற்பட்டிருந்தாலும், ஜெயில் ஒவ்வொரு நாட்டிலும் தொன்றுதொட்டே இருந்து வருகிறது. மக்கள் சமூக மாய்ச் சேர்ந்து வாழ ஆரம்பித்த காலத்திலேயே ஜெயிலும் தோன்றிவிட்டது. ஆதிமுதலே அது ஜனங்களின் மனத்தில் பீதியை உண்டாக்கக் கூடியதாகவே அமைந்து

விட்டது. கடவுளுக்குப் போட்டியாகப் பூலோகத்தில் மனிதன் படைத்த நரகமே ஜெயில் என்று சொல்லி விடலாம். தக்க சட்டங்களும், ஒழுங்கான நீதி விசாரணையும் இல்லாத பழங்காலத்திலும் ஜெயில் மட்டும் இருந்து வந்திருக்கிறது. அப்பொழுது ஜெயிலுக்குள்ளே எத்தனை ஆயிரம் நிரபராதிகள் துயரத்தில் அழுந்தி யிருப்பார்கள் என்பதைக் கணக்கிட முடியாது. மனிதர்கள் கைது செய்யப்பட்டவுடன் ஜெயிலுக்குள் தள்ளப் படுவார்கள். மாதக் கணக்காக, வருஷக் கணக்காக, விசாரணை முடிவாகாமல் இருக்கும். கைதிகளின் உணவுக்காகப் பந்துக்களோ நண்பர்களோ பணமும் பொருள்களும் கொண்டு கொடுப்பார்கள். காவலர்ளர்களுக்குச் சம்பளம் ஒன்றும் கிடையாது. கைதிகளையும் அவர்களுடைய உறவினர்களையும் மிரட்டியும் வதைத்தும் அவர்கள் ஊதியம் பெற்று வந்தார்கள். கைதிகளை அதிகமாய்த் தொந்தரவு செய்தால்தான் ஊதியமும் அதிகமாய்க் கிடைக்கும். இந்த நிலையில் ஒவ்வொரு கைதியும் நரக வேதனையை அநுபவிக்க நேர்ந்தது; ஒவ்வொரு காவலாளனும் இரக்கமற்ற கொடுங்கோலனாக விளங்க நேர்ந்தது.

முற்காலத்துத் தண்டனைகளும் மிகப் பயங்கரமானவை. உடலின் பல அங்கங்களை வெட்டுவது முதல், சிரச் சேதம், கழுவேற்றுதல், கழுத்தில் சுருக்கிடுதல் வரை விதவிதமான தண்டனைகள் உண்டு. சில சமயங்களில் குற்றவாளிகளை இரும்புக் கூடுகளில் அடைத்து, வண்டிகளில் ஏற்றி, நடுத்தெருக்களில் கொண்டு போய் நிறுத்தி வைத்துவிடுவார்கள். நாள் கணக்காகப் பட்டினி கிடந்து குற்றவாளிகள் மடிந்து போவார்கள்.

அவர்களைக் கண்ணால் பார்க்கும் பொது ஜனங்களுக்கு இந்த முறை பயங்கரமான பாடம் கற்பிக்கும் என்று எண்ணப்பட்டு வந்தது போலும்! இந்த இரும்புக் கூடுகள், மனிதரின் உடல் அமைப்பைப் போலவே, கை, கால், தலை எல்லாம் பொருந்தும்படி அமைக்கப்பட்டிருக்கும். இவைகளை இன்னும் நாம் பொருட் காட்சிச் சாலைகளில் காணலாம்.

நாகரிகம் மிகுந்த தற்காலத்திலும் ஜெயில் இருந்து வருகிறது. நாகரிகத்திற்கு ஏற்றபடி சட்டங்கள், நீதி விசாரணை, குற்றத்தின் தன்மைக்கு ஏற்ற தண்டனைகள், வக்கீல்களை நியமித்து வாதாட வேண்டிய சௌகரியங்கள், தேசம் முழுவதும் ஒரே மாதிரியான விசாரணை முறைகள் ஆகிய விரிவான பல ஏற்பாடுகள் இப்பொழுது இருந்து வருகின்றன. இவைகளை அநுசரித்து ஜெயிலும் ஓரளவு சீர்திருத்தப் பெற்றிருக்கிறது. ஜெயில் காவலாளர்கள், நிர்வாகிகள் அனைவருக்கும் அரசாங்கமே சம்பளம் கொடுக்கிறது. ஜெயில் நிர்வாகத்தைப் பற்றித் தனிச் சட்டங்கள் இருக்கின்றன. இந்தச் சட்டங்களை மீறியதாக நிரூபிக்கப்பட்டால், ஜெயில் அதிகாரிகள் கூடத் தண்டனைக்குள்ளாவார்கள். இவைகளையெல்லாம் ஆராய்வதானால், பல நூல்கள் எழுதவேண்டி யிருக்கும். இங்கே, சமூக அமைப்பில் ஜெயிலுக்கு உரிய ஸ்தானத்தையும், அவ்விரண்டுக்குமுள்ள சம்பந்தத்தையும் மட்டும் சிறிதளவு கவனிப்போம்.

சமூகம் ஒரு கடிகாரம் என்று வைத்துக் கொள்வோம். கடிகாரத்தில் சக்கரங்கள், விசைகள், முட்கள் முதலிய பல உறுப்புக்கள் உண்டு. இந்த உறுப்புக்களை

யெல்லாம் எடுத்து ஒரு தட்டில் குவித்து வைத்தால், அந்தக் குவியல் கடிகாரம் ஆகுமா? ஒவ்வோர் உறுப்பும் அதற்குரிய இடத்தில் பொருத்தப்பட் டிருந்தால்தான் 'கடிகாரம்' என்ற பெயருக்கு உரியதாகும். இதைப் போலவே, சமூகத்திலும் அநேகம் உறுப்புக்கள் உண்டு. மக்கள், இயற்கைப் பொருள்கள், பொருள் உற்பத்திக்கு வேண்டிய கருவிகள், உபயோகமான மிருகங்கள் எல்லாம் சேர்ந்ததுதான் சமூகம். இந்த உறுப்புக்களில் ஒவ்வொன்றும் தன்தன் இடத்தில் இருந்து தொழில் செய்ய வேண்டும். இல்லாவிட்டால் சமூகம் இராது. சில சமயங்களில் கடிகாரம் 'ரிப்பேர்' ஆகிச் சீர்திருத்த வேண்டி யிருக்கிறது அல்லவா? அதுபோலவே சமூகத்தி லும் நேர்வது உண்டு. மக்களில் சிலர், சமூகமாகிய கடிகாரம் முறையாக ஓடிக்கொண்டிருக்க விடாமல், இடையூறு செய்தால், அவர்களைச் சீர்திருத்தி மறுபடி அவர்களுடைய இடத்தில் பொருத்தி வைக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. நோய்வாய்ப் பட்டவர்களுக்கு வைத்தியசாலைகள் அமைப்பது போலவும், கெட்டுப் போன கடிகாரங்களுக்கு 'ரிப்பேர் ஷாப்புகள்' அமைப்பது போலவும், குற்றத்தில் வீழ்ந்த மக்களுக்கு ஜெயிலை அமைக்கவேண்டி யிருக்கிறது.

குற்றம் என்பது என்ன? இதைப் பற்றிப் பெரிய ஆசிரியர் பலர் விரிவாக ஆராய்ந்திருக்கிறார்கள்; இன்றும் ஆராய்ந்து வருகிறார்கள். எத்தனையோ சட்டப் புத்த கங்கள் இதைப் பற்றிய விவரங்களாகவே இருக்கின்றன. சுருக்கமாய்ச் சொன்னால், சமூகத்தை (சமூகத்தின் மற்ற உறுப்புக்களை) பாதிக்கும்படி எந்தக் கெடுதலை

யாவது தனி மனிதர் செய்தால் அது குற்றமாகும். எது 'கெடுதல்' என்பதை முன்னதாகவே ஆராய்ந்து சட்டங்கள் தயாரிக்கப் பெற்றிருக்கின்றன. ஆகவே, சர்க்காரின் சட்டங்களுக்கு விரோதமாகச் செய்யப்படும் எந்தக் காரியமும் குற்றமாகும். சரி, இந்தச் சட்டங்களைச் செய்தவர்கள் யார்? சட்டங்களை அமுல் நடத்தி வரும் சர்க்காரை நடத்துபவர்கள் யார்? இந்தக் கேள்விகள் விரைவில் தீர்க்க முடியாத பிரச்னைகளை எழுப்புகின்றன. நியாயமாக ஆராய்ச்சி செய்தால், பணம் படைத்த செல்வர்களே அதிகாரங்களைக் கைப்பற்றி, சர்க்காரை அமைத்துக்கொண்டு, தங்களுக்கு ஏற்ற சட்ட திட்டங்களை அமைத்துக்கொள்ளுகிறார்கள் என்பது புலனாகும். செல்வம் படைத்த வகுப்பினர், தங்களுக்கும் ஏழை மக்களுக்குமாக, தாங்களே நீதி பரிபாலன முறையை அமைத்திருக்கிறார்கள். ஒவ்வொரு நாட்டிலும் செல்வர் சிலரே; ஏழைகளோ கோடிக் கணக்கானவர். இது அடிப்படையான விஷயம். இதை மனத்தில் வைத்துக்கொண்டே தற்காலப் பிரச்னைகள் எல்லாவற்றையும் நாம் ஆராய்ச்சி செய்யவேண்டும். தற்கால சமூகம், அதன் அஸ்திபாரம், மேற்கோப்பு— எல்லாம் இந்த வேற்றுமையின் மேலேயே கட்டப்பெற்றிருக்கின்றன. ஆகவே, செல்வர்கள் இயற்றும் சட்டங்கள் அவர்களுக்கு அநுகூலமாகவே இருக்கும். நாட்டின் பரிபாலனம் முழுதும் அந்தச் சட்டங்களின் சாயலாகவே இருக்கும். சுதந்திர நாடுகளில் அந்தந்த நாட்டின் செல்வர்கள் சட்டங்கள் அமைக்கிறார்கள். அடிமை நாடுகளுக்கு யாரேனும் வெளிநாட்டார் சட்டங்களை இறக்குமதி செய்து கொடுக்கிறார்கள். இதனால்தான்

அடிமை நாடுகளின் சட்டங்கள் அடிமைத்தனத்தை வளர்த்து நிலைநாட்டும் முறையில் அமைகின்றன. ஆகவே, சட்டத்திற்கும் அரசியலுக்கும் உள்ள தொடர்பு தெளிவாகிறது. இதனால்தான், 'சட்டம் என்பது ஓர் அரசியல் முறை, சட்டந்தான் அரசியல்' என்று லெனின் அழுத்தம் திருத்தமாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

தற்கால அரசியல் முறைகளின் போக்கினால் நாடு தோறும் சில கோடீச்வரர்களும், சில ஆயிரம் பணக்காரர்களும், பல கோடி ஏழைகளும் இருக்கின்றனர். ஒரு பக்கத்திலே சில மாட மாளிகைகள்; அடுத்தாற் போல் குப்பை மேடுகளைப் போன்ற குடிசைகள். செல்வர்கள் கொழுத்து வளர்ந்து சுக போகங்களை அநுபவிக்கின்றனர். ஏழைகளோ, விவசாயக் கூலிகளாகவும், ஆலைத் தொழிலாளராகவும் உழைத்து வயிறு வளர்க்கின்றனர். இந்த இரு வகுப்பாருக்கும், இவர்களுக்கு இடையிலேயுள்ள மத்திய வகுப்பாருக்கும் சட்டங்கள் ஒரே மாதிரியாகத்தான் இருக்கின்றன. ஆயினும், அவை ஏழைகளையே அதிகமாய்ப் பாதிக்கும். ஒரு மூட்டை நெல்லை ஒரு செல்வன் திருடினாலும், ஏழை திருடினாலும் தண்டனை ஒன்றுதான். ஆனால், எவன் திருடுவான்? எவனுக்குத் திருட வேண்டிய அவசியம் உண்டு?

இப்பொழுது உலகில் நடந்துவரும் பல்லாயிரம் 'குற்றங்கள்' அவைகளைச் செய்தவர்களின் குணப் பிசகுகளால் மட்டும் ஏற்பட்டவை அல்ல. சமூக அமைப்பின் ஏற்றத் தாழ்வுகளாலும், அநீதி முறைகளாலும் அவை ஏற்படுகின்றன. 'குற்றங்க'ளுக்குச்

சமூகமும் ஓரளவு பொறுப்புள்ளதே. சமூகம் தன் பொறுப்பை உணராமல் தட்டிக் கழித்துவிட்டு, ஜெயிலை மட்டும் பெரிதாகக் கட்டி, 'குற்றவாளிகளை' உள்ளே அடைத்துவிட்டால் பரிகாரம் உண்டாகிவிடுமா? ஜெயிலுக்குள் தள்ளப்பட்ட 'குற்றவாளிகள்' சீர்திருந்தி விடுகிறார்களா? சீர்திருந்தாவிட்டாலும், பழைய நிலைமையிலாவது விடுதலையாகிறார்களா? அல்லது, 'குற்றவாளிகள்' மறைந்து, 'பெருங் குற்றவாளிக'ளாக வருகிறார்களா?

இன்றுள்ள நிலைமையில் ஜெயில் எப்படியிருக்கிறது? ஜெயில் வாசிகள் எப்படியிருக்கின்றனர்? அவர்களை மேய்த்து வரும் அதிகாரிகள் எப்படியிருக்கிறார்கள்? இவைகளைப் பற்றிப் பொது ஜனங்கள் ஓரளவாவது தெரிந்துகொள்ள வேண்டியது அவசியம். தண்டனை அடைந்தவர்களின் நன்மையும் தின்மையும் சமூகத்தையும் பாதித்தே தீரும். நம்மிடையேயுள்ள ஒரு பெருங் கூட்டத்தினருக்குக் கொடுக்கப்படும் தண்டனையின் தழும்புகளை நாம் அவர்களிடம் தேடிப் பார்க்க வேண்டாம்; நம் உடல்களிலும் உள்ளங்களிலுமே அந்தத் தழும்புகளைக் கண்டுகொள்ளலாம். ஒரு திருடன் ஒரு செல்வனுடைய பொருளைத் திருடுகிறான் என்று வைத்துக் கொள்வோம். செல்வன் இழப்பது வெறும் பொருளைத் தான்; ஆனால் திருடனோ, தன் மனிதத் தன்மையையே இழக்கிறான் என்பதை ஆசிரியர் பெர்னார்ட் ஷா நன்றாக விளக்கியிருக்கிறார். எந்த நஷ்டம் பெரியது? இதைப் போலவே, தண்டனை அடைந்த தனி மனிதர்கள் பலவிதத் துன்பங்களை அநுபவிப்பார்கள்; தண்டனை அளித்த சமூகமும் அதன் பலனை அநுபவித்தே தீரும்.

சமூகம் ஒரு முறை சட்டங்கள் இயற்றிவிட்டால், பிறகு அடிக்கடி அவைகளை மாற்ற இசையாது. நாளடைவில் சட்டங்கள், மாற்றவும் உடைக்கவும் முடியாதபடி, இறுகிப் போய்விடும். சட்டங்களை அமுல் நடத்துபவர்களே அவைகளை மாற்ற விடாமல் குறுக்கே நின்று வெற்றிகரமாகத் தடுத்துவிடுவார்கள். ஏன்? அது அவர்கள் சுபாவம். எந்த வலிமையைக் கொண்டு தடுப்பார்கள்? அந்தச் சட்டங்களின் பலத்தைக் கொண்டே தடுப்பார்கள். அப்படியானால், சமூகம் தூங்கிக்கொண்டிருக்குமா? ஆம், சமூகம் ஒருவகைத் தூக்கத்தில் ஆழ்ந்திருக்கும். அதை எழுப்புவது, மலை போன்று படுத்திருக்கும் மலைப்பாம்பை எழுப்புவது போல், கடினமான விஷயந்தான். சாதாரண அனற் பொறிகளாகிய கிளர்ச்சிகளால் பல சமயங்களில் அதை எழுப்பிவிடலாம்; சில சமயங்களில் புரட்சியான பெருந் தீயாலேயே சமூகத்தை விழிக்கச் செய்ய முடியும். உடனே காலத்திற்கு ஏற்ற புதுச் சட்டங்கள் பிறக்கும். முன்னேற்றம் உண்டாகும். சமூகத்தில் மீண்டும் அமைதி நிலவும்.

ஜெயில் நிர்வாகத்தைப் பற்றி அடிக்கடி அனற் பொறிகள் பறப்பதுண்டு. ஒவ்வொரு தேசத்திலும் சில அறிஞர்கள், ஜெயில் நிர்வாகத்தின் ஊழல்களைப் பேச்சாலும் எழுத்தாலும் வெளிப்படுத்தி, பெரிய சீர்திருத்தங்களுக்கு அடிகோலி யிருக்கிறார்கள். அவர்களால் அநேக நன்மைகள் ஏற்பட்டிருக்கின்றன. ஆயினும், இந்த நன்மைகள் கடலில் கரைத்த காயத்தைப் போன்றவை தான். பெற்ற நன்மைகள் ஒரு கை மண்ணளவு; பெற

வேண்டியவையோ உலகளவு இருக்கின்றன. இவைகளைச் சிந்திக்கும் பொழுது, ஜெயிலைச் சீர்திருத்தவே முடியாதோ என்ற அவநம்பிக்கை ஏற்படுகிறது. பல நாட்டு மக்களையும், சமூக அமைப்பையும் பற்றி வாழ்நாள் முழுதும் ஆதரவோடு ஆராய்ச்சி செய்து வந்த ரஷ்ய ஞானியான கிரபாட்கின் பிரபு, 'ஜெயிலைச் சீர்திருத்துவதற்கு ஒரே வழிதான் உண்டு; அது ஜெயிலையே தகர்த்தெறிவதுதான்' என்று சொல்லியிருக்கிறார். அவருக்குப் பல பெருமைகள் இருந்ததோடு, பல ஜெயில்களில் தாமே கைதியாயிருந்த பெருமையும் உண்டு. கருணைமூர்த்தியான இந்த மேதாவியின் வாக்கியத்தைக் கேட்போர் உலகில் சிலர்தான்; அதைப் பற்றிச் சிந்திப்பவர்களையோ காணவே முடியவில்லை.

ஜெயிலைச் சீர்திருத்துவதைப் பற்றிய ஆராய்ச்சிகள் சில நம் நாட்டிலும் வெளிவருகின்றன. இவை பெரும்பாலும் ஜெயில் அதிகாரிகளாக இருந்தவர்கள் எழுதியவை. ஜெயில் இன்ஸ்பெக்டர் – ஜெனரலாக இருந்த பார்க்கர் என்பவர் அநேகம் நல்ல யோசனைகள் எழுதியிருக்கிறார். அவைகளில் ஒன்று, கைதிகள் கையில் வைத்துக்கொண்டு சந்தோஷமடைய அவர்கள் ஜெயிலிலுள்ள புஷ்பங்களைப் பறித்து வைத்துக்கொள்ள அநுமதிக்கலாம் என்பது! பர்மாவில் ஜெயில் இன்ஸ்பெக்டர் – ஜெனரலாயிருந்த ஒருவர் கைதிகளுக்கு அளிக்கப்படும் உணவுப் பொருள்கள் மிகுந்த புஷ்டியைத் தரக்கூடியவை என்று பாராட்டி எழுதியிருக்கிறார்! இந்த வாக்கியங்களில் உண்மை இல்லாமலில்லை. ஆயினும், இவைகளைப் பார்த்து நாம் ஆனந்திக்கும் பொழுது, கிரபாட்கின் பிரபுவின் சூத்திரம்

ஞாபகத்திற்கு வந்து மூளையைக் கலக்கிவிடுகிறது. மேற் கூறிய மாஜி – அதிகாரிகளைப் போலவே நமக்கும் சீர் திருத்த ஆர்வம் உண்டு, அநுதாபமும் இருக்கிறது. எனினும், நாம் பார்க்கும் கொடுமைகளையும், கேட்கும் அநீதிகளையும் விரைவிலே மறந்துவிடுகிறோம். மேலும், நாம் எல்லோருமே பழக்கத்திற்கு அடிமைகள். நுனிப் புல் மேய்வதுதான் நமக்கு எளிது. சலனம், அசைவு, மாறுதல் எதையும் கண்டால் பயமுண்டாகிறது. பிறகு, மறதி எல்லாவற்றையும் மறைத்துவிடுகிறது. நமக்கு எத்தனையோ அலுவல்கள். ஜெயிலைப்பற்றியும் அதற்குள் வாடும் சிறகொடிந்த பறவைகளைப்பற்றியும் நமக்கு என்ன? லட்சக் கணக்கான கைதிகளின் ஓலம் நம் தூக்கத்தைக் கலைப்பதில்லை; கோடிட்ட அரைக் கைச் சட்டையும், குறைக் கால் சட்டையும், வானரக் குல்லாவும் அணிந்த மனித உருவங்களின் நிழல்கள்கூட நம் கண்களில் படுவதில்லை. ஏன்? வழக்கம், வழக்கம், தொன்று தொட்டு வந்த வழக்கந்தானே!

குற்றம் செய்வது ஒரு நோய். அந்நோய் உள்ளத்தில் சம்பந்தப்பட்டது. அதற்கு வைத்தியம் செய்ய ஏற்பட்ட மருத்துவசாலைதான் ஜெயில். பிணி யாளர் எவ்வளவு ஆதரவுடனும் அன்புடனும் நடத்தப் பட்டால் பிணிகள் நீங்குமோ, அது போலவே குற்ற வாளிகளும் கவனிக்கப்பட வேண்டும், தண்டனைகள் குற்றவாளிகளைச் சீர்திருத்துவனவாக இருக்கவேண்டும்; அவர்களையும் பொது ஜனங்களையும் பயமுறுத்துவனவாக இருந்து பயனில்லை என்பதை இதுவரை சரித்திரம் நிரூபித்து வருகிறது. 10–வருஷம் 20–வருஷம் என்றெல்

தவர்களையும் அதை நன்ருய்ப் படித்துக்கொள்ள ஏற்ற பள்ளிக்கூடமாய் ஜெயில் விளங்குகிறது. பெரிய கொள்ளை வழக்குகளில் தண்டனை பெற்றவர்கள் கோழி முட்டை திருடி ஜெயிலுக்கு வரும் கைதிகளை ஏளனம் செய்து நகைப்பார்கள். விரைவில் சின்னத் திருடர்களுக்கு அவர்கள் ஆசாரியர்களாக ஆகிவிடுவார்கள்.

ஜெயிலிலே 'கறுப்புக் குல்லாக்கள்' என்று ஒரு வகுப்பினர் உண்டு. இவர்கள் திரும்பத் திரும்ப ஜெயிலுக்கு வருபவர்கள். இவர்கள் விடுதலையாகிப் போகும் வாசலை அடைக்கவேண்டிய அவசியமே இல்லை. ஏனெனில், இவர்கள் விரைவாக மறுபடி வந்துவிடுவார்கள். இவர்களுக்குக் கறுப்புக் குல்லாக்கள் கொடுக்கப் படுகின்றன. குல்லாக்களே இவர்களுக்குப் பட்டப் பெயர்களாகிவிட்டன. இவர்களை 'லோலாயிகள்' என்றும் சொல்வதுண்டு. ஜெயில்கள் உள்ள நகரங்களில் சாதாரண ஜனங்கள் ஏசும்பொழுதுகூட, 'போடா, லோலாயி!' என்று சொல்லுவது வழக்கம். இத்தகைய பதங்கள் பல ஜெயிலின் பரிபாஷையில் உண்டு. ஜெயிலி லுள்ள கை விலங்கு, கால் விலங்கு, கடப்பாரை விலங்கு, சுவர் விலங்கு முதலிய விலங்கு வகைகளே இன்னும் நம் தமிழ் அகராதியில் வராமலிருக்கும் பொழுது ஜெயில் பரிபாஷைப் பதங்கள் நமக்கு எப்படித் தெரியமுடியும்? பதங்கள் எப்படியேனும் போகட்டும்! புதிய கைதிகள் தீட்சை பெறுவது மேற்சொன்ன லோலாயிகளிடம்தான் என்பதை நாம் தெரிந்துகொண்டால் போதும்.

ஜன்ம தண்டனை அடைந்தவர்களுக்குச் சிவப்புக் குல்லாக்கள் கொடுக்கப்படுகின்றன. அவர்களிற் பலர்

அநேக ஜெயில்களில் அநுபவம் பெற்றவர்களா யிருப்பார்கள். வாழ்க்கையில் நெடுங்காலத்தை அவர்கள் ஜெயிலில் கழிக்க நேர்வதால், நாளடைவில் அவர்கள் காவலாளர்களாகிய வார்டர்களுக்கு உதவி ஆட்களாக வைக்கப்படுவார்கள். அவர்களுக்கு ஜெயிலிலுள்ள ஒவ்வொரு பொந்தும் புடையும் தெரியும்; பல வருஷங்களாக வந்து போகும் ஜெயில் அதிகாரிகளுடைய நடத்தையும் மனப்போக்குகளும் தெரியும்; அதிகாரிகள் கண்கள் திறந்திருக்கும்போதே கண்கட்டி வித்தைகள் செய்யவும் தெரியும்.

இவ்வாறெல்லாம் இருப்பதைப் பார்த்தால், இந்த மக்களையெல்லாம் அடைத்து வைத்திருப்பது சரிதான் என்று தோன்றும். ஜனங்கள் அப்படித்தான் எண்ணுகிறார்கள். ஆனல் உண்மை அப்படியில்லை. கைதிகள் நிறைந்த ஒரு ஜெயிலுக்குள் ஒரு சிறு குழந்தையை அனுப்பிப் பாருங்கள். உடனே நூற்றுக் கணக்கான கைதிகள் ஓடி வந்து அதைத் தூக்கி வைத்துக்கொண்டு கொஞ்சுவார்கள். நோய்வாய்ப்பட்ட கைதிகளுக்கு மற்றக் கைதிகள் உதவி செய்வது வழக்கமா யிருக்கிறது. கைதிகளும் நம்மைப் போன்ற மனிதர்களே என்பது நேரில் ஒரு முறை பார்த்தாலும் விளங்கும். அவர்கள் ஜெயிலில் அதிகம் கெட்டுப் போகக்கூடிய சந்தர்ப்பங்களை நாமே அமைத்திருக்கிறோம். தண்டனை பெற்றதிலிருந்து அவர்களுடைய மனச்சாட்சி மழுங்க ஆரம்பிக்கிறது. வெளியிலுள்ளோரிடம் வெறுப்பும் துவேஷமும் கொள்ளுகிறார்கள்.

TIRUNELVELI MUNICIPAL.
Public Library & Reading Room
TIRUNELVELI JUNCTION

எத்தனையோ சினிமாக்களும், நாடகசாலைகளும், வாசகசாலைகளும், போக்குவரவு சாதனங்களும், மற்ற வசதிகளும் பெற்றிருந்தும், நாம் அடிக்கடி, 'பொழுது போகவில்லையே!' என்று சொல்லுகிறோம். கோட்டைக்குள் - அறைக்குள் - அடைபட்டு வெளியுலகத் தொடர்பே இல்லாதிருக்கும் கைதிகளுக்குப் பொழுது எப்படிப் போகும்? பொழுது சும்மா போகுமா? ஒவ்வொரு நாளும் கைதிகளின் உள்ளத்தின் உரத்தை உறிஞ்சிக் கொண்டும், உடல்களை வற்ற வைத்துக் கொண்டுமே பொழுது போகும். கடைசியில் அவர்கள் தங்களைத் தாங்களே பார்த்துக்கொண்டு, தம் பரிதாப நிலைக்கு இரங்க ஆரம்பித்துவிடுவர். விடுதலையாகும் வரை இரங்குதலும், ஏங்குதலும், விம்முதலும், பொருமுதலுமாகப் பொழுது கழியும். இதற்குப் பின் உள்ளத்திற்கு மீட்சி ஏது?

கைதியானவுடனே மனிதன் தன் சுதந்திரத்தை இழந்துவிடுகிறான். நிற்கவும், உட்காரவும், உண்ணவும், உறங்கவும்கூட அவன் பிறர் உத்தரவை எதிர்பார்க்க வேண்டியவனாகிறான். இது மட்டுமா? ஜெயில் வாசலுக்குள் நுழைந்ததும் அவன் நிர்வாணமாக்கப்பட்டு, அவனுடைய வழக்கமான உடைகள் பறிக்கப்படுகின்றன. மனிதனை அலங்கோலமாக்கும் ஜெயில் உடை (குல்லா உள்பட) அவனுக்குக் கொடுக்கப்படுகிறது. மாறுதல் இத்துடனும் நிற்கவில்லை. அவனுக்கு ஓர் எண் —'நம்பர்'— கொடுக்கப்படுகிறது. அவனுக்கு முந்தி வந்தவனுடைய அடுத்த 'நம்பர்' அவனுடையது. இவ்வாறு மனிதன் 'நம்ப'ராக மாறிவிட்ட பிறகு மனிதத் தன்மையைப் போக்குவதற்கு வேறு அநேகம் சடங்குகளும் உண்டு.

மனிதனைக ஜெயிலுக்குள்ளே போனவன், இடையில் ஒரு 'நம்ப'ராகி, விடுதலையாகும் பொழுது பழைய மனிதனும் இல்லாமல், 'நம்ப'ராயும் இல்லாமல், ஒரு புது சிருஷ்டியாகக் காட்சியளிப்பான்!

ஜெயில் தவச்சாலை அல்ல; அது ஒரு நாளும் அப்படியிருக்க முடியாது. அது மானிட உள்ளத்தைப் பண்படுத்தும் வைத்தியசாலையாகவும் இருக்க முடியாது. ரம்பம், கோடரி, உளி, சம்மட்டி முதலிய கருவிகளைக் கொண்டு நோயாளிக்கு 'ஆபரேஷன்' செய்து குணப்படுத்த முடிந்தால், ஜெயிலைக்கொண்டு குற்றவாளியையும் சீர்திருத்த முடியும். மனிதனின் சுதந்திரத்தைப் பறித்த பிறகு அவனுக்கு எந்த உபதேசமும் ஏறாது. சிறகை ஒடித்துவிட்டால் பறவை பறக்க முடியாது. பறக்கவே முடியாத பறவை பாட முடியுமா? 'மனிதன் அடிமைப் பட்ட முதல் நாளே தன் ஆண்மையில் பாதியை இழந்து விடுகிறான்' என்று கிரேக்கப் புலவர் ஹோமர் கூறியது உண்மையிலும் உண்மை.

*   *   *

மரண தண்டனையைப்பற்றி இங்கே அதிகம் குறிப்பிட வேண்டியது அவசியமில்லை. இப்பொழுது உலகத்தில் பெரும்பாலான தேசங்களில் இந்தத் தண்டனை ரத்தாகிவிட்டது. பிரிட்டிஷ் சாம்ராஜ்ய நாடுகளில் — முக்கியமாக இந்தியாவிலும் இங்கிலாந்திலும் — மரண தண்டனையை இன்னும் மாற்றாமலிருப்பது பிற்போக்கையே காட்டுகிறது. ஒரு வெறியில் கொலை செய்தவனை சமூகம் நிதானமாக ஆழ்ந்து யோசித்துத் தூக்கிலிட்டுக்

'கொலை' செய்வது மனிதத் தன்மைக்கும் நாகரிகத்திற்கும், பொருத்தமான தண்டனையாகாது. ஜெயிலில் ஒரு கைதியைத் தூக்கிலிடும் தினம், ஜெயில் அதிகாரிகளுக்கும் அங்குள்ள எல்லாக் கைதிகளுக்குமே ஒரு துக்க தினம் என்றும், தூக்கிடும் காரியத்தை நிறைவேற்றும் அதிகாரிகளும் வெறுப்போடு வேகமாக முடித்துவிட்டு வெளியேற விரும்புகிறார்கள் என்றும் பர்மா ஜெயில் இன்ஸ்பெக்டர்–ஜெனரலாக இருந்த லெப்டினன்ட் கர்னல் **தரபோர்** கூறுகிறார்.

*　　　　*　　　　*

ஜெயில் அதிகாரிகளும் வார்டர்களும் கைதிகளைப் போலவே நம் அநுதாபத்திற்கு உரியவர்கள். அவர்கள் குற்றம் ஒன்றும் செய்யாமலே 'ஜன்ம தண்டனை' அடைந்தவர்கள்! அவர்களுக்கும் விமோசனம் வேண்டும்.

இப்பொழுது ஜெயில் சீர்திருத்த விஷயத்திலும், நீதியான நீதி விசாரணை முறையிலும் உலகத்தின் முன்னணியில் நிற்கும் ரஷ்யாவில் நடைபெறும் காரியங்களை நாம் கவனமாக ஆராய்ந்தால் விமோசன மார்க்கம் நன்கு புலனாகும். ரஷ்யாவிலுள்ள ஸோவியத் சட்டங்கள் ஏற்பட்டு 25–வருஷமே ஆகிறது. ஆயினும் அவைகளை ஆராய்வதும், வெளிநாட்டுச் சட்டங்களுடன் ஒப்பிட்டுப் பார்ப்பதும் மிகுந்த பலனை அளிக்கும். நாமும், அதிகாரிகளும், முக்கியமாக ஜெயில் நிர்வாகிகளும் ரஷ்ய முறைகளைப் பற்றி எழுதப்பட்ட புத்தகங்களையும், பத்திரிகைகளையும் படித்தறிய வேண்டியது மிகமிக

அவசியம். அந்த முறைகள் உலகத்திற்கே புதுமை யானவை, ஆச்சரியமான பலனைக் கொடுத்து வருபவை.

நீதி நிர்வாகமும் ஜெயில் நிர்வாகமும் ஒன்றோடு ஒன்று இணைப்புள்ளவை. ஆதலால், ரஷ்யாவில் நீதிபதிகள் அடிக்கடி ஜெயிலுக்குப் போய் அங்குள்ள நிலைமைகளைப் பரிசீலனை செய்யக் கடமைப்பட்டவர்கள். அங்கே நீதிபதிகளில் இரண்டு பிரிவினர் உண்டு: ஒரு பிரிவினர் வழக்கமாக நீதிபதிகளா யிருப்பவர்கள்; மற்றொரு பிரிவினர் பொது ஜனங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப் பெற்றவர்கள். நீதி விசாரணையில் செல்வருக்கென்று விசேஷ வசதிகள் இல்லை. எந்த ஏழையும் எளிதில் வக்கீல் வைத்துக்கொண்டு விவாதம் செய்து நீதி பெற முடியும். வக்கீல்களுக்கு 'பீஸ்' கிடையாது. கட்சிக் காரர்களுடைய வசதிக்குத் தக்கபடி வக்கீல்களின் சங்கத் திற்குப் பணம் கொடுப்பார்கள். அந்தச் சங்கத்தார், வக்கீல்கள் அந்தந்த மாதத்தில் எவ்வளவு சிரமப்பட்டு உழைத்திருக்கிறார்கள் என்பதைக் கவனித்து, மொத்த வருமானத்திலிருந்து ஊதியம் பிரித்துக் கொடுப்பார்கள். குற்றம் சாட்டப்பட்டவர்களின் உரிமைகள் பாது காக்கப்பெற்றிருக்கின்றன. விசாரணைக்கு முன்னால் கைது செய்வதே அபூர்வம். குற்றவாளிகளோடு சமூகமும் குற்றத்திற்குப் பொறுப்புள்ளது என்பதை ஸோவியத் சட்டங்கள் எல்லாம் அடிப்படையாகக் கொண்டிருக் கின்றன. இதனால் ஏற்பட்டுள்ள நன்மைகள் அனந்தம்.

ரஷ்யாவில் நேரில் போய்ப் பார்த்து வந்த **ஹாரோல்ட் லாஸ்கி** ருசிகரமான அநேக விஷயங்களைக் குறிப்பிட்

டிருக்கிறார். நீதி நிர்வாகத்தை நடத்துகிறவர்களே தண்டனை முறைகளையும் கவனித்து மேற்பார்த்து வருவதால் கொடுமைகள் மறைந்து விடுகின்றன. நாள் தோறும் நீதி முறைகள் ஆராய்ச்சி செய்யப்பட்டு, முன்னேற்றப் பாதைகள் வகுக்கப்படுகின்றன. கைதிகள் சுயமரியாதையுடன் நடத்தப்படுகிறார்கள். ஒவ்வொரு கைதியும் இன்பமாகவும் கௌரவமாகவும் வாழ ஏராளமான வசதிகள் கொடுக்கப்பட் டிருக்கின்றன. கைதிகளை மானபங்கப் படுத்தும் சட்டங்களோ, காரியங்களோ கிடையா. கைதிகள் தங்களுக்குள்ளேயே சிலரை நியமித்துக்கொண்டு ஜெயிலுக்குள் சுய ஆட்சி நடத்துகிறார்கள். ஒழுங்காக நடக்காத கைதிகளை மற்றக் கைதிகளே சீர்திருத்திக் கொள்ளுகிறார்கள். கைதிகள் ஓய்வு நேரங்களை நல்ல தொழில்கள் செய்வதிலும், கல்வி கற்பதிலும், சினிமா, நாடகம் முதலியவை பார்ப்பதிலும் செலவிடுகிறார்கள். அநேகம் கைதிகள் ஜெயிலிலிருக்கும் போதே சர்வ கலா சாலைகளுக்குப் போய் வகுப்புக்களில் சேர்ந்து படித்துவிட்டு வருகிறார்கள். அவர்கள் வெளியே போய் வரும்போது 'பாரா' ஒன்றும் கிடையாது. அப்படிப் படித்த பல கைதிகள் இப்பொழுது ஸோவியத் ராஜாங்கத்தில் எஞ்சினீர்களாகவும், வக்கீல்களாகவும், அதிகாரிகளாகவும், தொழில் நிபுணர்களாகவும், தளகர்த் தர்களாகவும் இருக்கிறார்கள். இவை யெல்லாம் நமக்கு மிகுந்த வியப்பான விஷயங்கள். இவைகளோடு ஒப்பிட்டால், நம் ஜெயில்களில் கைதிகள் மிருகங்களைப் பார்க்கினும் கேவலமாகவே நடத்தப்படுகிறார்கள் என்பது தெரியும்.

ஸோவியத் ஜெயில்களில் கைதிகள் இஷ்டம்போல் பாடலாம், ஆடலாம், படிக்கலாம், பக்கத்திலுள்ள எந்தக் கைதிகளுடனும் எந்த நேரத்திலும் பேசிக் களிக்கலாம். நம் ஜெயில்களில் பக்கத்திலுள்ள கைதிகளுடன் அகாரணமாகப் பேசக்கூடாது என்றும், ஓர் அறையை விட்டுக் கைதிகள் உத்தரவன்னியில் வெளியே செல்லக் கூடாது என்றும் விதி உண்டு. ரஷ்யாவில் கைதிகள் சிகரெட் சுருட்டு முதலியவை உபயோகிக்கலாம். இந்தியாவில் கைதிகள் புகையிலை, பீடி முதலியவை வைத்திருந்தால் அதற்காகச் சில மாதங்கள் கூடுதல் தண்டனையோ வேறு தண்டனைகளோ கொடுக்கப்படும். எனினும், சில கைதிகள் ரகசியமாகப் பீடி வாங்கிவிடுகிறார்கள். சிலர் தங்களுக்குக் கிடைக்கும் ஒரு கட்டிச் சோறு அல்லது களியில் பாதியை ஒரு பீடிக்காக விற்றுவிடுவார்கள். பிறகு பட்டினியிருந்து பீடியை அநுபவிப்பார்கள். ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை காலையிலும் ஜெயில் விதிகள் கைதிகளுக்குப் படிக்கப்படும். இந்த விதிகளின் அலங்கோலம் எதையும் ரஷ்ய விதிகளில் காண முடியாது. நம் ஜெயில் முறை மனிதனை விலங்காக மதிக்கிறது; ரஷ்ய ஜெயில் முறை மனிதனை மனிதனாகவே மதிக்கிறது.

இந்திய தேசாபிமானச் செல்வரும், விசேஷச் சட்ட ஞானம் பெற்ற வக்கீலுமான ஸ்ரீ புலாபாய் தேசாய் ஜெயில் முறையைப் பற்றி கூறியுள்ள அபிப்பிராயம் இங்கே சிந்திக்கத்தக்கது.

'குற்றவாளியைச் சீர்திருத்தி அவனை மறுபடி சமூகத்திற்கு அருகதையுள்ளவனாகத் திரும்ப அனுப்பு

வதைப் பற்றிப் பேசும் பொழுது, ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேல் அந்தப் பேச்சுப் பொருளற்றுப் போவதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். ஒரு குற்றவாளியைச் சீர்திருத்தி, அவனை உண்டாக்கிய சமூகத்தினிடமே திரும்ப ஒப்படைப்பதில் என்ன பயன்? ஒரு சகோதரன் மற்ற சகோதரனுக்கு நியாயத்தை வழங்கவும், தன்னைப் போல் சுக சௌக்கியங்களை அடையும் சந்தர்ப்பத்தை அளிக்கவும் மறுக்கும் வரை, ஒருவனுடைய கை மற்றவனை அடிக்க ஓங்கியே நிற்கும். அவர்களில் வலிமை மிகுந்தவன் சட்டத்தை இயற்றி வைப்பான்; மெலிந்தவன் அதை உடைப்பான். முதலாமவன் ஜெயிலராயிருப்பான்; இரண்டாமவன் குற்றவாளியாயிருப்பான். இப்பொழுது உள்ளதைவிட அதிக நீதியான ஒரு சமூகப் பொருளாதார அமைப்பை ஏற்படுத்தாமல், குற்றவாளியும் ஜெயிலரும் நேசப்பான்மையுடன் இருப்பார்கள் என்று நாம் உண்மையாக எதிர்பார்க்க முடியுமா?'

# 2. தீவாந்தரம்

'என்ன, நிதான் சிங், எப்படி யிருக்கிறீர்?'

'ஏன், உம்முடைய மகளுக்கு மாப்பிள்ளை தேடுகிறீரா? நான் எப்படி இருக்கிறேனென்று என்னை ஏன் விசாரிக்கிறீர்? வெட்கங்கெட்ட ஜன்மமே! என்னுடனு தமாஷ் பண்ண வேண்டும்? என் காலில் கடப்பாரை விலங்கு மாட்டி யிருக்கிறது; உட்கார முடியாமல் நிறுத்தி வைத்துக் கையில் நிலை விலங்கு மாட்டியிருக்கிறது; தனிக் கொட்டடியில் அடைக்கிறீர்கள்; சாப்பாடு கிடையாது—வெறும் உப்பில்லாக் கஞ்சிதான் குடிக்கவேண்டுமென்று தண்டனை! இவ்வளவுக்கும் மேலே உடம்பு எப்படி யிருக்கிறதென்று விசாரணை வேறே! இந்த "ஜோக்" வேறு வேண்டியிருக்கிறதா? இந்த இடத்தை விட்டுத் தொலையும். உம்முடைய முகத்தில் விழிக்கவே பிடிக்கவில்லை எனக்கு!'

மேலே குறிக்கப்பட்ட சம்பாஷணை எப்படி யிருக்கிறது? கேள்வி கேட்டவர் அந்தமான் சிறையின் ஜெயிலர். பதில் சொன்னவர் ஒரு கிழவர்; பெயர் நிதான் சிங்; வயது 75; லாகூர் சதியாலோசனை வழக்குக் கைதி. இவர் சிறையில் செய்த குற்றம் கைதிகளைத் துன்புறுத்துவதை நிறுத்தவேண்டுமென்று சூப்பிரண்டை வேண்டிக்கொண்டது.

TIRUNELVELI MUNICIPAL
Public Library & Reading Room
TIRUNELVELI JUNCTION.


பர்மா சதியாலோசனை வழக்குக் கைதிகளில் ஒருவர் அமார் சிங். ஒருநாள் தமக்குக் கொடுக்கப்பட்ட வேலையை மாலை 3 மணிக்கே செய்து முடித்துவிட்டு, தம் பிளாக்கின் முன்னுலிருந்த வராந்தாவில் நடந்து கொண்டிருந்தார். அதை ஜெயிலர் பார்த்துவிட்டார். 'ஒஹோ! என்ன இப்படி உலாத்துகிறீர்?' 'என்னைப் பார்த்து இப்படிப் பயமுறுத்துவதற்கு, உங்கப்பா தலை மேலேயா நடக்கிறேன் நான்?' என்ருர் அமார் சிங். மறுநாள் அவருக்கு ஆறு மாதம் தனிக்கொட்டடியும் * கடப்பாரை விலங்கும் கிடைத்தன.

ஐக்கிய மாகாணத்தைச் சேர்ந்த வைதிகப் பிராமணர் ஒருவர். அவருடைய பெயர் ராம் ரக்கா. பர்மா சதியாலோசனை வழக்குக் கைதி. இந்தியாவிலிருந்து கொண்டு வந்தவுடனே, ஜெயில் வாசலிலேயே அவருடைய பூணூல் அறுக்கப்பட்டுவிட்டது. 'பூணூல் இல்லாமல் பிராமணனுன நான் உணவு உண்ணக் கூடாது, தண்ணீர் குடிக்கக் கூடாது என்பது சாஸ்திரம். அதைக் கழற்றுவது மத விரோதம்' என்று ஆட்சேபித்தும் பயனில்லாது போயிற்று. பூணூல் திரும்பக் கிடைக்காததால் அவர் உண்ணு விரதம் மேற்கொண்டார். அப்புறம் என்ன ஆயிற்று? என்ன ஆகும்! பட்டினியிருக்கும் போதே மார்பு வலியெடுத்தது. தக்க வைத்திய வசதியில்லை. நள்ளிரவிலே, வலி பொறுக்காமல் கூக்குரலிட்டாராம். இரவில் கூச்சலிட்டால் வார்டர் சும்மா

* கடப்பாரை விலங்கு என்பதில் இரு கால்களையும் அகற்றி வைத்து ஒன்று சேர்க்க முடியாதபடி இடையில் நீளக் கம்பி மாட்டியிருக்கும்,

இருப்பாரா? பச்சைத் தண்ணீரைத் தூக்கி அவர் மேல் கொட்டினாராம். இவ்வாறு இரண்டு மாதம் போராட்டம் நடந்து, போராடியவர் பூவுலகை நீத்துச் சென்றார். 'என்னென்ன செய்தாலும் பூணூல் திரும்பக் கொடுக்கப் பட்டதா?' என்று அதிகாரிகள் சந்தோஷப்பட்டிருப் பார்கள்.

1919-ல் பஞ்சாப் ராணுவச் சட்ட அமுலுக்குப் பின், பஞ்சாப்பிலிருந்தும், ஆமதாபாத்திலிருந்தும் ஏராள மான கைதிகள் அந்தமானுக்குக் கொண்டு போகப் பட்டனர். அவர்களுக்குச் செக்கிழுக்கும் வேலை கொடுக்கப்பட்டது. அவர்கள் செய்ய மறுக்கவே தனி அறைகளில் தள்ளிப் பூட்டப்பட்டனர். ஒரு நாள் முழுதும் பட்டினி போடப்பட்டனர். மறுநாள் எல்லோரும் வெளியே கொண்டுவரப்பட்டு செக்கடியில் நிறுத்தப்பட்டனர். 1919-லேயே சத்தியாக்ரக தத்துவம் பரவிவிட்டதல்லவா? அவர்கள், செக்கிழுக்க மறுத்து, கீழே தரையில் படுத்துக்கொண்டு சத்தியாக்ரகம் செய்தனர். அவர்களுடைய கால்களும் கைகளும் கயிறு களால் கட்டப்பட்டு, எல்லாக் கயிறுகளும் செக்கின் கம்பத்துடன் கட்டப்பட்டன. வேறு கைதிகளைக் கொண்டு செக்கு ஓட்டுவிக்கப்பட்டது. இந்தச் சத்தி யாக்ரகிகள் 'செக்கிழுக்க மாட்டோம்' என்றால், செக்கு அவர்களை இழுத்துக்கொண்டு சுழல ஆரம்பித்து விட்டது! தரை நெடுக எத்தனை முறை சுற்றிச் சுற்றி யிழுக்கப்பட்டார்களோ! சத்தியாக்ரகிகள் எல்லோ ருக்கும் கை, கால், முதுகு, வயிறு எங்கும் காயங்கள்; செக்கைச் சுற்றி இரத்தம் சிதறப்பட்டது. இப்படி

வெகு நேரம் நடந்ததாம். அறைகளிலிருந்து மற்ற ராஜீயக் கைதிகள் விஷயம் தெரிந்து ஆர்ப்பாட்டம் செய்த பின் இது நிறுத்தப்பட்டதாம்.

இவ்வாறு அந்தமானைப் பற்றி, வங்காளிகள், பஞ்சாபியர், ஐக்கிய மாகாணத்தார் முதலியோரிடம் இருந்து எத்தனையோ கதைகள் கேட்கிறேம். கடைசியாக, நமது சென்னை மாகாணத்திலிருந்து ஸ்ரீ. பயங்கராசாரி அந்தத் தீவில் சிறையிருந்து, திரும்பி வந்து, தம் அநுபவங்களை 'அந்தமான் நரகம்' என்ற புஸ்தகமாகவே எழுதியிருக்கிறார். எது எப்படி யிருந்தபோதிலும், அந்தமான் ஒரு துன்பக் கேணி, ஒரு நரகமே என்பதில் சந்தேகமில்லை. கிழக்கு 'மாகடலுக்கு நடுவினிலே,' அந்தக் 'கண்ணற்ற தீவினிலே,' பாரத ஜாதியில் புஷ்பித்த எத்தனையோ மலர்கள் வதங்கி, வாடி, மணமிழந்து அழிந்திருக்கின்றன. பாரத சமுதாயத்தின் தீங்கனிகள் பல அங்கே நசுக்கப்பட்டு, சாறெல்லாம் பிழியப்பட்டு, சக்கைகளாக எறியப்பட்டிருக்கின்றன. சாவர்க்கர் சகோதரர்கள், பரீந்திர குமார் கோஷ் முதலியோர் காலத்திலிருந்து எத்தனை யுவர்கள் அந்தத் தீவாந்தரத்தில் கிடந்து வாடியிருக்கின்றனர்! காலில் நகம் முளைத்த நாள் முதலாய்த் தேசத்திற்காக உழைத்த தியாகிகளில் எத்தனை பேர் அங்கு செல்லவேண்டி யிருந்தது! அவர்களிற் பெரும்பாலோர் மகாத்மா காந்தி காலத்திற்கு முற்பட்டவர்கள். 'இந்தியா சுதந்திரம் பெறுவதற்கு கத்தி, வாள், பிஸ்தல், விஷக்கிண்ணம் — இவை யொன்றுமே தேவையில்லை. "முடியாது" (ஒத்துழைக்க முடியாது) என்று ஒரே மூச்சில்

சொல்லுவதற்கு அதற்கு உறுதி ஏற்பட்டால் போதும் — சுயராஜ்யம் வந்துவிடும்' என்று காந்திஜி வட்ட மேஜை மகாநாட்டில் சொல்வதற்கு முன்னலேயே அவர்களிற் பலர் அந்தமானை அடைந்துவிட்டனர். அவர்களுடைய குற்றங்கள் இந்திய ஜாதி விழிப்படைவதற்கு முன்னலேயே அவர்கள் விழிப்படைந்ததும், பலாத்கார முறையைக் கையாண்டதும். அந்தமானிலே மாண்டவர்களின் தியாகம் அளவற்றது; மாளாமல் எலும்புருகி, நைந்து, தளர்ந்து, கால்களிலும் கைகளிலும் விலங்குத் தழும்புகளுடன் தாய் நாடு திரும்பியவர்களிற் பெரும்பாலார் விடுதலையாகி யிருக்கிருர்கள். அந்தமானைக் 'கைதிகளின் சொர்க்கம்' என்ருர் ஸ்ரீ. கிரேய்க். அந்தத் தரித்திரம் பிடித்த தீவை நாம் சொர்க்கமாகக் கொண்டாடா விட்டாலும், அது நமக்கு ஒரு க்ஷேத்திரமாகிவிட்டது. நம்மவர்கள் அங்கே நெடுங்காலம் தியாக அனல் வளர்த்திருக்கிருர்கள். கீழ்த் திசையில் அந்தத் தியாக அக்னியை நோக்கி, நம் வணக்கத்தை முதலில் தெரிவித்துக் கொள்வோம்.

வங்காளக் குடாக் கடலில் சங்கிலிப் பின்னலைப் போல் சுமார் 800 சிறிய தீவுகள் இருக்கின்றன. அவற்றைத்தான் நாம் அந்தமான் என்று சொல்லுகிறோம். ஆங்கிலத்தில் 'அந்தமான்கள்' என்று பன்மையில்தான் சொல்லுவார்கள். ஏனெனில் பல தீவுகள் இருக்கின்றன அல்லவா? சௌகரியத்திற்காக நாம் அந்தமான் என்றே வைத்துக் கொள்வோம். அந்தமானின் விஸ்தீரணம் 3,143 சதுர மைல். முன்னல் எடுக்கப்பட்ட கணக்கின்படி அங்கே 17,814 ஜனங்கள் இருந்தார்கள். அவர்களில்

15,551 ஆண்கள், 2,263 பெண்கள். ஐந்து பெரிய தீவுகள் ஒன்று சேர்க்கப்பட்டு, 'பெரிய அந்தமான்' என்ற பெயரால் அழைக்கப்படுகின்றன. அவற்றிற்குத் தெற்கே 'சிறிய அந்தமான்' ஒன்றிருக்கிறது. அவற்றிற்கும் தெற்கே நிகோபார் தீவுகளிருக்கின்றன. சிறிய அந்தமானிலிருந்து அவை 75-மைல் தூரத்தில் இருக்கின்றன. அவற்றின் விஸ்தீரணம் 635-சதுர மைல்; ஜனத்தொகை 9,272.

அந்தமானின் சீதோஷ்ணம் மத்தியதரமானது; அதிக உஷ்ணமுமில்லை, குளிர்ச்சியுமில்லை. மலேரியா, வயிற்றளைச்சல் நோய்களுக்குக் காரணமாயிருப்பதால் அந்தச் சீதோஷ்ணம் ஆரோக்கியத்திற்கு ஏற்றதன்று. வருஷத்தில் எட்டு மாதம் மழை; நான்கு மாதங்களுக்குத்தான் மழை இராது. குளங்கள் ஏரிகள் முதலியவை இல்லாததால் சிறு குட்டங்களில் மழைத் தண்ணீர் தேக்கி வைக்கப்படுகிறது. தீவெங்கும் குன்றுகள் நிறைந்திருப்பதால் உழுது பயிர் செய்யப் போதிய நிலங்களில்லை. கொஞ்சம் அரிசி, பயறுகள், காய்கறிகள் மட்டுமே விளைவிக்கப்படுகின்றன. தெங்குப் பொருள்களும், பெரிய பெரிய உத்திரங்களும் அந்தமானில் அதிகம் கிடைக்கும். பலாக் கனிகளும், மாங்கனிகளும் அங்கு கிடைத்தபோதிலும் அவை உயர்ந்த ரகத்தைச் சேர்ந்தவையல்ல. பப்பாளிக்காயும் வெள்ளரிக்காயும் ஏராளமாய் விளைகின்றன. அங்குள்ள ஜனங்களுக்கு வேண்டிய அரிசி, பருப்பு, உருளைக்கிழங்கு முதலியவை இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன.

ஏராளமான காடுகளிருந்தும் அங்கே கொடிய வன விலங்குகள் அதிகமில்லை. விஷமில்லாத பாம்புகள் எங்கும் அதிகமா யிருக்கின்றன. அங்குள்ள பூரான்கள் மிகப் பெரியவையாயும் விஷமுள்ளவையாயும் இருக் கின்றன. அநேகமாக எல்லாத் தீவுகளிலும் கொசுவும், அட்டைகளும், பூச்சிகளும் அதிகம் உண்டு.

அந்தமானின் பூர்வீக ஜனங்கள் நீகிரோவரைப் போல் இருப்பார்கள். குள்ளமாயும், கறுப்பாயும், சுருட்டைத் தலையுடனும் இருப்பார்கள். இவர்கள் இரண்டு வகுப்பினராக இருக்கிறார்கள். ஒரு வகுப்பினர் தான் பிரிட்டிஷ் அரசாங்கத்தாரால் அடக்கி நாகரிகப் படுத்தப்பட்டு வந்தனர். இந்த வகுப்பினரில் பலரும் தங்கள் இடைகளைத் தழைகளாலேயே மூடிக்கொண்டு திரிகிறார்கள். இவர்களிற் பெரும்பாலார் வேட்டை யாடியே ஜீவனஞ் செய்கிறார்கள். கிறிஸ்தவ மிஷனரிகள் இவர்களைக் கொஞ்சம் கொஞ்சமாகக் கிறிஸ்தவ மார்க் கத்தில் சேர்த்து வருகிறார்கள். சிறையிலிருந்து தப்பி யோடிய கைதியைக் கண்டால் இவர்கள் உடனே அவனைப் பிடித்துக் கொடுத்துவிட வேண்டுமென்றும், அப்படிக் கொடுத்தால் ஒரு கைதிக்கு ரூ. 10 – வீதம் பரிசளிப்பதாயும் சர்க்கார் இவர்களுக்குச் சொல்லி வைத்திருந்தார்களாம். இவர்களைத் தவிர முற்றிலும் அநாகரிகமாய்க் காட்டில் வாழும் வகுப்பினர் சில நூறு பேர்தான் இருக்கின்றனர். காடுகள் இடைவிடாமல் அழிக்கப்பட்டு வருவதால் இவர்கள் தொகையும் சுருங்கிக் கொண்டே வருகின்றது.

அந்தமான் நிர்வாகம் முழுதும் ஒரு பிரதம கமிஷனரின் கையில் இருந்தது. அவருக்கு வருஷச் சம்பளம் ரூ. 36,000. அவர்தான் இந்தியா அரசாங்கத்திற்குப் பொறுப்பானவர். தீவுகள் ஏழு ஜில்லாக்களாகப் பிரிக்கப் பட்டு, ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒரு மாஜிஸ்திரேட் வைக்கப்பட்டிருந்தார். பிரதம கமிஷனருக்குக் கீழ் உதவி கமிஷனரும், ஜில்லா ஆபீஸரும் இருந்தனர். அங்கே அநேகம் போலீஸ் ஸ்டேஷன்கள் இருந்தன. அந்தமானுக் கென்று மிலிடரி போலீஸும் இருந்தது. அங்கிருந்த முக்கியமான வெள்ளைக்கார அதிகாரிகள் மட்டும் அந்தமானின் தலைநகரமான ரூஸ் என்னுமிடத்தில் வசித்து வந்தார்கள். ரூஸ் ஒரு தனித் தீவு.

ஜன்ம தண்டனையும் நீண்ட காலத் தண்டனையும் பெற்ற கைதிகளை நாடு கடத்திச் சேர்த்து வைப்பதற்காக அந்தமான் உபயோகிக்கப்பட்டு வந்தது. தீவாந்தர சிட்சைக்காக அந்தமான் தேர்ந்தெடுக்கப்பட்டதே 1858 – க்குப் பிறகுதான். அவ் வருஷம் இந்தியாவின் சுதந்திரத்திற்காகப் பல போராட்டங்கள் நடந்ததும், பற்பல வீரர்கள் ஜாதி, மத பேதமின்றி அவைகளில் தலைமை வகித்து நடத்தியதும் சரித்திரப் பிரசித்தமான விஷயங்கள். அந்த யுத்தங்களில் முக்கியமாக ஆயிரக் கணக்கான சிப்பாய்கள் கலந்து போராடினர். கலகக் காரர்களில் பல்லாயிரவர் சுடப்பட்டும், தூக்கிலிடப் பட்டும் மாண்டனர். அநேகர் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்டவர்களிற் பலர் இந்த நாட்டில் இருந்தாலே மீண்டும் கலகங்களுக்குக் காரணமாகு மென்றதால், அவர்களை எங்காவது தொலையில் ஒதுக்க

மான தனியிடத்தில் வைக்கவேண்டியது அவசியமாயிற்று. அவர்கள் அந்தமானுக்கு அனுப்பப்பட்டனர். கிரெய்க் துரை 'சொர்க்கம்' என்று வருணித்த அந்தமான் சிறையின் ஆரம்பச் சரித்திரம் இது. எனவே முதன் முதலில் அந்த க்ஷேத்திரத்தில் காலெடுத்து வைத்த கைதிகள், வெறும் 'கிரிமினல்கள்' என்றழைக்கப்படும் குற்றவாளிகள் அல்லர்; தேசபக்தர்களும் யுத்தக் கைதிகளுமாவர். அவர்கள் மீண்டும் பிறந்த நாட்டைப் பார்க்கவே யில்லை யென்று சொல்லப்படுகிறது. கஷ்டமான வேலைகளையும், விபரீத சீதோஷ்ணத்தையும், நோய்களையும், உணவுக் குறைவையும், வைத்திய வசதிக் குறைவையும் தாண்டி அவர்களில் எத்தனை பேர் பிழைத் திருந்தார்களோ தெரியவில்லை.

அந்தமானுக்குச் சென்ற இரண்டாவது ராஜீயக் கைதிகளின் படையும் யுத்தக் கைதிகளைக் கொண்டது. தீபா அரசனின் தலைமையில் பர்மாவில் பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்த்துப் போராடிய பர்மியர்களே அந்தக் கைதிக்ள். தீபர் மன்னர் தோல்வியுற்று 1885-ல் சரணடைந்தார். அதற்கு அடுத்த வருஷம் கைதிகள் தீவுக்கு அனுப்பப் பட்டனர். இவர்களில் பிழைத்திருந்தவர்கள் 1919-ல் மாண்ட்-போர்டு சீர்திருத்தத்திற்குப் பின்பு விடுதலை செய்யப்பட்டனர்.

இதற்குப் பின் அஸ்ஸாம் மாகாணத்து முனிப்பூர் மன்னர் ராஜா குலசந்திராவும், அவருடன் சேர்ந்து கலகஞ் செய்த கூட்டாளிகளும் அந்தமானில் வைக்கப்பட் டிருந்தனர். ராஜா மட்டும் ராஜாங்கக் கைதியாகப் பாவிக்கப்பட்டார்.

இவ்வாறு, அந்தமானில் கைதிகளைக் குடியேற்றுவது 1858-ல் ஆரம்பிக்கப்பட்டு, 1920-வரை நடந்துவந்தது. அதுவரை தூக்கு மரத்துக்குத் தப்பியவர்கள் எல்லோரும் அங்கே அனுப்பப்பட்டு வந்தனர். 1920-க்குப் பின் கைதிகளை அங்கு அனுப்புவது நிறுத்தப்பட்டது. அங்கிருந்த எல்லா ராஜீயக் கைதிகளும் அநேகம் கிரிமினல் கைதிகளும் இந்தியச் சிறைகளுக்கு அனுப்பப் பட்டனர். ஆனால், 1933-லிருந்து மீண்டும் கைதிகளை—முக்கியமாக ராஜீயக் கைதிகளை—சர்க்கார் அங்கு அனுப்ப ஆரம்பித்தனர். ராஜீயக் கிளர்ச்சிக்காரர்களுக்குக் கிலி பிடிக்க வேண்டுமென்றோ, அல்லது வேறு எக் காரணத்தாலோ, 1934-35ல் இந்தியாவின் நாலா பக்கத்துச் சிறைகளிலும் சிதறிக் கிடந்த ராஜீயக் கைதிகள் யாவரும் அந்தமானுக்கு அனுப்பப்பட்டனர். கடைசியில் 1936-ல் நமது மாகாணத்தைச் சேர்ந்த ஸ்ரீ. பயங்கராசாரியும் அங்கு அனுப்பப்பட்டார். மறுபடி 1938-ம் வருஷக் கடைசியிலும் அடுத்த வருஷத்திலும் அந்தமானில் இருந்து ராஜீயக் கைதிகள் இந்தியாவுக்குக் கொண்டு வரப்பட்டதும், அதற்குக் காரணமாயிருந்த உண்ணாவிரதப் போராட்டம், மகாத்மா காந்தியின் தலையீடு முதலிய விஷயங்களும் யாவரும் அறிந்தவையே.

இந்தியா முழுதும் பிரசித்தி பெற்ற அந்தமான் சிறை போர்ட் பிளேர் என்ற துறைமுகத்தில் இருக்கின்றது. இந்தத் துறைமுகம் தெற்கு அந்தமானில் உள்ளது. பத்து வருஷங்களுக்கு முன் இதன் ஜனத்தொகை 14,395. சிறை ஒரு குன்றின் மேல் அமைக்கப்பட்டிருக்கிறது. சிறையை நிர்வகிப்பவர்கள் சூப்பிரண்டு, ஜெயிலர், ஜெயில்

சிப்பாய்கள், கைதி – வார்டர்கள் முதலியோர். இச் சிறைச்சாலை மூன்று மாடியுள்ள கட்டிடம். மொத்தம் ஏழு பிளாக்குகள் இருக்கின்றன. அவற்றில் 700 கைதிகளை அடைக்க முடியும். சட்டப்படி இச் சிறைக்குக் கொண்டுவரப்படும் கைதிகள், மூன்று மாதத்திற்குப் பிறகு விடுதலை செய்யப்பட்டு வெளியே அனுப்பப் படுவார்கள். அவர்கள் உள்ளே யிருக்கும் காலம் சில சமயங்கள் ஆறு மாதம் முதல் இரண்டு வருஷம்வரை நீடித்தாலும் நீடிக்கும். பொதுவாக மூன்று மாதத் திற்குப் பின் வெளியே விடப்படுவார்கள். அவர்கள் பல தீவுகளிலும் பிரித்தனுப்பப் படுவார்கள். பலரை ஒன்று சேர்த்து ஒரு கூட்டமாக அமைத்து, ஒவ்வொரு கூட்டத் திற்கும் ஒரு ஜெயிலரையும், ஒரு டாக்டரையும் நியமிப் பார்கள். எல்லாக் கைதிகளும் அது முதல் வெளியே வேலை செய்வார்கள். அவர்களுக்கு ஊதியமாக மாதம் ஒன்றுக்கு ரூபா 10 கொடுக்கப்படும். இந்த ரூபா 10–ம் கைதிகள் கையில் தங்குவதில்லை யென்றும், அதில் பெரும் பகுதி கடினமான வேலைகளிலிருந்து தப்பித்துக்கொள்ள வேலை வாங்கும் ஆசாமிகளுக்கு லஞ்சமாகக் கொடுக்கப் படுகிறதென்றும் ஸ்ரீ. பயங்கராசாரி சொல்லுகிறார். தீவுகளில் ஆங்காங்கே பந்தல் போட்ட கூடங்கள் இருக்கின்றன. கைதிகள் அங்குதான் உணவு வாங்கி உண்ண வந்து கூடுவார்கள். அவர்களுக்கு இடப்பட்ட வேலை முழுவதையும் அவர்கள் செய்து தீரவேண்டும். அளவுக்கு மேலாக வேலை செய்பவர்களுக்கு கூடக் கொஞ்சம் ஊதியம் கிடைக்கும். அவர்கள் மரம் அறுத்தல், காடழித்தல், மண் வெட்டுதல், ரஸ்தா அமைத்தல் முதலிய எத்தனையோ கடினமான வேலைகளைச்

செய்கிறார்கள். சிறையினுள் அடைபட்டிருக்கும் கைதிகளைப் பார்க்கிலும் அவர்களுக்குச் சில விசேஷ உரிமைகளுண்டு. அவர்கள் கொஞ்சம் சிகரெட், புகையிலை முதலியவை வாங்கிக் கொள்ளலாம். சிறையில் இவை எப்படியிருக்கும் என்று கூடத் தெரியாது. ஐந்து வருஷம் கடுமையாக உழைத்து, நற்குணமுடையவர்கள் என்று கருதப்படுபவர்கள் இரண்டாம் வகுப்புக் கைதிகளாக உயர்த்தப்படுவார்கள். அவர்களுக்குச் சாப்பாடு போகக் கூடுதல் படித்தனம் கொடுக்கப்படும். அவர்கள் தங்கள் உணவைத் தாங்களே சமைத்துக் கொள்ளவும் அநுமதிக்கப்படுவார்கள். நன்னடத்தையுடன் பத்து வருஷம் தாண்டிவிட்ட கைதிகள் முதல் வகுப்புக்கு உயர்த்தப்படுவார்கள். அவர்கள் சொந்தத் தொழில் செய்யலாம், கலியாணம் செய்து கொள்ளலாம், சுதந்திரர்களாக வாழலாம். பெண் கைதி ஐந்து வருஷத் தண்டனை அநுபவித்த பின் மணம் செய்து கொள்ளலாம். 1920–க்குப் பின் ஆண் கைதிகள் மூன்று வருஷத்திற்குப் பின் விவாகம் செய்து கொள்ளவும் அநுமதிக்கப் பட்டார்கள். கைதிகளின் உடைகள் இந்தியச் சிறைகளிலுள்ளவற்றைப் போலவேதான்: அதே கறுப்புக் கோடிட்ட அரைக் கால் சட்டை, குறைக் கைச் சட்டை, மனிதனை வானரமாக்கும் அதே குரங்குக் குல்லாதான்.

அந்தமானிலுள்ள கைதிகள் இந்தியாவின் பல மாகாணங்களிலிருந்து சென்றிருப்பதால் அவர்களுடைய சாப்பாடு வெவ்வேறு விதமாயிருக்கும். ஆனால் ஜெயிலில் ரொட்டியும் சோறுமே கொடுப்பார்கள். காலையில் கொஞ்சம் அரிசிக் கஞ்சி; சாப்பாட்டிற்கு இரண்டு

சப்பாத்தி; கொஞ்சம் சோறு; வருஷம் முழுதும் துவரம் பருப்பும் ஒரே விதமான குழம்பும் கொடுப்பார்கள்.

ஜெயிலுக்குள் கைதிகளுக்குக் கொடுக்கப்படும் வேலைகள் மிகவும் கஷ்டமானவை. செக்கிழுத்தல், கயிறு முறுக்குதல், தச்சு, கொல் வேலைகள் முதலிய பல வேலைகளுண்டு. மாதந்தோறும் மூன்று, நான்கு லட்சம் தேங்காய்களிலிருந்து எண்ணெய் எடுக்கப்படுகின்றது. அந்தத் தேங்கா யெண்ணெய் இந்தியாவுக்கும் பர்மா வுக்கும் அனுப்பப்பட்டு வந்தது.

பெரிய போக்கிரிகளான கிரிமினல் கைதிகளே அந்தமானுக்கு அனுப்பப்படுகிறார்கள் என்று காரணம் வைத்துக்கொண்டு, ஜெயில் நிர்வாகம் முழுவதிலுமே கண்டிப்பும் கொடுமையும் கையாளப்படுகின்றன.

ராஜீயக் கைதிகள் விஷயத்தில் கடைசியாகக் கொஞ்சம் மாறுதல் ஏற்பட்டிருந்தபோதிலும், முன்னால் அவர்கள் மிகவும் கேவலமாகவே நடத்தப்பட்டு வந்தார்கள். அவர்களுக்கும் மற்ற கிரிமினல்களுக்கும் ஒரே மாதிரியான வாழ்க்கைதான், ஒரே சட்டந்தான், ஒரே மாதிரி அமுல்தான். கொடுமைகளைத் தாங்க மாட்டாமல் அடிக்கடி கைதிகள் தற்கொலை செய்து கொள்வது வழக்கமா யிருந்தது. இந்தியச் சிறைகளைப் பார்க்கினும் தற்கொலை அங்கு மிகவும் அதிகம். உணவு அளவில் போதாது, ருசியிலும் மட்டம். வேலையோ பளுவானதா யிருக்கும். கைதிகளே மேலதிகாரிகளாய் நியமிக்கப்படுவதால், மிருகத்தனமான கொடுமையைத் தவிர வேறு என்ன எதிர்பார்க்க முடியும்? கல்வி யறிவும், சிந்தனா சக்தியும் பெற்ற ராஜீயக் கைதிகள் இழிவாக

நடத்தப்படுவதையும், துன்பங்களையும் எப்படிச் சகித்துக் கொண்டிருப்பார்கள்? நாளடைவில் மானபங்கமாயுள்ள சகல சட்டங்களையும் அவர்கள் மீற ஆரம்பித்தார்கள். அக்காலத்தில் ஒரு பிளாக்கில் அடைக்கப்பட்டிருந்த ராஜீயக் கைதிகள் ஒருவரோ டொருவர் பேசக்கூடாது. அவர்கள் ஒன்ருய் வேலை செய்யலாம், ஒரே இடத்தில் வசிக்கலாம் — ஆனல் வாய் திறந்து பேசக்கூடாது! வேலை செய்யும் பொழுது இரண்டு ராஜீயக் கைதிகள் சேர்ந்தாற்போல் நெருங்கி உட்காரக்கூடாது. இடையில் கிரிமினல்கள் உட்கார்த்தப்படுவார்கள். இந்த அவமான கரமான சட்டத்தை, ராஜீயக் கைதிகள், எத்தனை தடவை முடியுமோ அத்தனை தடவை உடைத்தெறிந்தார்கள். அதற்குரிய தண்டனை, குனிய உட்கார முடியாதபடி ஏழு நாள் நிலைவிலங்கும், காலில் கடப்பாரை விலங்கும். இத் தண்டனையை அவர்கள் மீண்டும் மீண்டும் ஏற்றுக் கொண்டார்கள். கிரிமினல்கள் அடிக்கப்படும் பொழுதும், தாக்கப்படும் பொழுதும், அவர்கள் ஒன்று சேர்ந்து ஆட்சேபித்தாலும், சாப்பாடு நன்ருயில்லை என்றே, குறைவு என்றே குறை கூறினாலும் தண்டனைகள் கொடுக்கப்படும். சிறை அதிகாரிகளை எதிர்த்து நின்ருலொழியக் கொடுமைகள் ஒழிய மாட்டா என்று ஆதியில் போராடியவர்கள் சாவர்க்கர் சகோதரர்களும், அரவிந்தரின் சகோதரர் பரீந்திர குமார் கோஷும், அவர்களுடன் வசித்த ராஜீயக் கைதிகளும். இதனல் அவர்களுக்குத் திரும்பத் திரும்பத் தண்டனைகள் கிடைத்துக்கொண்டே இருந்தன. கடைசியில் அவர்களுக்குச் சாதாரண வேலையும், சுமாரான நல்ல உணவும் கொடுக்கப்பட்டன.

இவ்வாறே புதிதாய் வந்த ஒவ்வொரு ராஜீயக் கைதிகளின் கூட்டமும் போராடிப் போராடி ஓரளவு உரிமைகள் பெறவேண்டியிருந்தது. சாவர்க்கர் சகோதரர்களில் மூத்தவரான கணேச தாமோதர சாவர்க்கர் (ஜன்ம தண்டனை), இளையவரான விநாயக தாமோதர சாவர்க்கர் (55–வருஷ தீவாந்தர சிட்சை), பரீந்திரர் (ஜன்ம தண்டனை), புலின் பிஹாரி தாஸ் (7–வருஷ) இவர்கள் எல்லோரும் ஐரோப்பா யுத்தத்திற்கு முன்னால், பழைய சுதேசி இயக்கக் காலத்திலேயே, அந்தமானில் இருந்தவர்கள். அமெரிக்காவிலிருந்து புறப்பட்டு வந்த இந்தியப் புரட்சிக்காரர்களான 'கத்தர்' கட்சியினர் பஞ்சாபுக்கு வந்து, அங்குள்ள தோழர்களுடன் சேர்ந்து, ஜெர்மன் உதவிகொண்டு செய்து வந்த வேலைகளின் காரணமாக, பிரபலஸ்தர்களான பாய் பரமானந்தர், ஜ்வாலா சிங், பிரிதிவி சிங் முதலியோர் தண்டிக்கப்பட்டு, அந்தமானுக்கு அனுப்பப்பட்டனர். இவ்வாறே, வரிசையாகப் பல மாகாணங்களிலிருந்து, பல சதியாலோசனை வழக்குகளில் தண்டிக்கப்பட்டவர்கள் அனுப்பப்பட்டு வந்தார்கள். 1920–ல் இருந்து கைதிகள் அனுப்புவது நிறுத்தப்பட்டு இருந்ததால் 1932–ல் அந்தமானில் ராஜீயக் கைதிகளே இல்லை. ஆனால், 1933–ல் மீண்டும் கைதிகளை அனுப்புவது ஆரம்பமானதால் கணேஷ் கோஷ், ஆனந்த சிங், சிட்டகாங் ஆயுதக் கொள்ளை வழக்கில் சம்பந்தப்பட்ட இதர கைதிகள், மூன்றாவது லாகூர் சதியாலோசனை வழக்குக் கைதிகளான பூதகேஸ்வர தத்தர், கமலநாத் திவாரி, குந்தன்லால் முதலிய நூற்றுக்கணக்கானவர் கிரெய்க் துரையின் அந்தச் 'சொர்க்க'த்திற்கு அனுப்பப்பட்டனர்.

பொதுவாக இவர்கள் ஒவ்வொருவரும் அநுபவித்திருக்கும் துன்பத்தையெல்லாம் தனித்தனி நூலாக எழுதினாலும் அடங்காது. அப்படியும் சிலர் தம் அந்தமான் வாழ்க்கையைப்பற்றி எழுதியிருக்கிறார்கள். சுருங்கச் சொன்னால், விடுதலையாகி, சுத்த சுதந்தரியாக விளங்கும் பாரத தேவியின் ஜோதிமயமான ஓர் உருவத்தைக் கற்பனைக் கண்ணால் கண்டு, அந்த ஆனந்த லாஹிரியில் தங்கள் துன்பங்களை மறைத்துக்கொண்டு தான் இவர்கள் வாழ்ந்திருக்க வேண்டும்.

மிகவும் திட சரீரிகளான கைதிகளும், அந்தமான் சென்றவுடன் வாரந்தோறும் எடை குறைந்து, பற்பல நோய்களுக்கு இருப்பிடமாய் விளங்கினார்கள். அந்தமானே மனித வாசத்திற்கு லாயக்கில்லை என்று பலர் பல சமயம் எடுத்துரைத்திருக்கிறார்கள். அத்தகைய தீவில் கொடுமையும், கண்டிப்பும், கடினவேலையும் உள்ள சிறைச்சாலையில் அடைத்து வைப்பது நிறுத்தப்பட வேண்டும் என்று வெகு நாளாய்க் கிளர்ச்சிகள் நடந்து வந்திருக்கின்றன. ஆனால், மஹாவீர்சிங் முதலியோர் உண்ணா விரதமும், மரணமும், பின்னால் 1937 – ல் அநேகமாக எல்லா ராஜீயக் கைதிகளும் உண்ணா விரதம் ஆரம்பித்ததும் இந்தியாவின் முழு கவனத்தையும் அந்தமானை நோக்கி இழுத்தன. இனியாவது இதைப் போன்ற 'கண்ணற்ற தீவு' க்கு எவ்விதக் கைதியையும் அனுப்பாமல் இருக்க நிரந்தரமான ஏற்பாடு செய்ய வேண்டும்.

'பூலோகத்தில் ஒரு நரகம் உண்டானால் அது இந்தியச் சிறைச்சாலைதான்' என்று கர்னல் வெட்ஜ்வுட்

சொல்லியிருக்கிறார். இந்தியச் சிறைச்சாலைக்கே 'நரகம்' என்ற பெயரைக் கொடுத்துவிட்டால், அந்தமானில், போர்ட் பிளேர் துறைமுகத்தில், குன்றின் மேல் விளங்கும் அந்த ஜெயிலுக்கு வேறு என்ன பெயர் கொடுக்க முடியும்?

* * *

அந்தமான் இரண்டாவது உலக மகா யுத்தத்தில் கைமாறி விட்டது. அது ஜப்பானியர் கையில் இருக்கிறது. மறுபடி அது இந்திய அரசாங்கத்தின் கைக்கு வந்துவிட்டாலும், கைதிகளை அங்கே அனுப்புவதை இந்திய மக்கள் அனுமதிக்கக் கூடாது.

## 3. இலங்கையில்

# இந்தியத் தொழிலாளர்

உலக ஜனத் தொகையில் இந்தியர் சுமார் ஆறில் ஒரு பங்கு இருக்கின்றனர். இலங்கையின் ஜனத் தொகையில் இந்தியர் எண்ணிக்கை சுமார் ஆறில் ஒரு பங்கு. உலகத்தில் ஆறில் ஒரு பாகத்தினராகிய இந்தியர் சொந்த நாட்டிலேயே அடிமைகளாய், அரசியல் பராதீனத்திலும், சமூக – பொருளாதார நிலைமையில் பாதாளத்திலும் கிடந்து உழல்வது போலவே, இலங்கையின் ஆறில் ஒரு பாகத்தினராகிய இந்தியரில் பெரும்பாலார் கேவலம் உயிரடைத்த சடலங்களாக வாழ்கின்றனர். பெரும்பாலும் இந்தியர் விடுதலையைப் பொறுத்தே இலங்கை – இந்தியர் விடுதலையும் ஏற்படக்கூடும். ஆயினும், இடையில் இந்தியாவிலும் இலங்கையிலும் செய்ய வேண்டிய வேலைகள் எவ்வளவோ இருக்கின்றன. அதிலும், இலங்கையிலுள்ள இந்தியரில் பெரும்பாலார் தமிழர்களாய் இருப்பதால், தமிழ் நாட்டிலேதான் அபரிமிதமான கிளர்ச்சியும் பிரசாரமும் செய்யவேண்டியிருக்கிறது. அதற்கு அடிப்படையாக இலங்கையில் வாழும் தமிழர்களும் விழித்துக்கொண்டு, மிகுந்த கட்டுப்பாட்டுடன், ஐக்கியமாகவும், தீவிரமாகவும் வேலை செய்ய வேண்டும்.

இலங்கையிலுள்ள இந்தியரில் சுமார் ஏழு லட்சம் பேர் தேயிலை, ரப்பர், கொக்கோ தோட்டங்களில் வேலை செய்யும் தொழிலாளர்கள்; சுமார் இரண்டரை லட்சம் பேர் தோட்டங்களுக்கு வெளியே நகரங்களிலும், கிராமாந்தரங்களிலும் பலவித வேலைகள் செய்தும், வர்த்தகம் செய்தும் வாழ்பவர்கள். இந்தியர்களில் பெரும்பாலார் தோட்டக் கூலிகளா யிருப்பதே அங்கு நமது பலமாகவும் பலவீனமாகவும் இருக்கிறது. தோட்டத் தொழிலாளர் இலங்கையின் செல்வத்திற்கும், தோட்ட முதலாளிகளான ஐரோப்பியர் லாபத்திற்கும் காரணமாய் இருப்பதாலும், அந்த ஐரோப்பியர் செல்வாக்கே இலங்கை அரசியலில் உச்ச ஸ்தானத்தில் இருப்பதாலும், தோட்டத் தொழிலாளரின் பலத்தினலே, அவர்களைப் பின்சார்ந்து வெளியிலுள்ள தொழிலாளரும், பணக்காரரும், வர்த்தகர்களும் வாழ்கிறார்கள். எந்த நாளில் தோட்டத் தொழிலுக்கு இந்தியர் அவசியம் இல்லாமற் செய்யப்படுகின்றதோ அதே தினத்தில் மற்றெல்லா இந்தியரும் மூட்டை முடிச்சுக்களுடன் புறப்படவேண்டிவரும். இவ்வாறு மற்ற இந்தியருக்கும் அரணாக விளங்கும் தோட்டத் தொழிலாளரே நமது பலவீனமாயும் விளங்குவது எவ்வாறென்றால், அவர்களை ஐக்கியப்படுத்தி, தங்கள் உரிமைகளை உணர்ந்து கிளர்ச்சி செய்யும்படி செய்வது பகீரதப் பிரயத்தனம். தவிரவும், இந்திய ஆலைத் தொழிலாளரைப் போலன்றி, அவர்கள் பயங்கரமான அடிமைத் தளைகள் பூட்டப்பட்டிருக்கிறார்கள். வாழ்வுக்கே போதாத வருமானம்; குடியிருக்கும் குடிசையும் முதலாளியுடையது; முதலாளி உத்தரவில்லாமல் யாரையும் காணவோ பேசவோ

முடியாது; சங்கம் அமைத்து உழைக்கச் சந்தர்ப்பமே கிடையாது. முதலாளி நினைத்தால் அவர்களைப் பஞ்சாகக் காற்றிலே பறக்கும்படி ஊதிவிட முடியும்! ஆயினும், அவர்களை வைத்தே எல்லோருக்கும் விடிவுகாலம் வர வேண்டியிருக்கின்றது.

1833 – ம் வருஷம் அடிமை வியாபாரம் ஒழிக்கப் பட்டதில் இருந்து இலங்கைத் தோட்டங்களில் இந்தியரைக் கொண்டுபோய் உழைக்கச் செய்யும்படி ஏற்பட்டது. இலங்கை அரசாங்கமே கூலிகளை இறக்குமதி செய்யும் பொறுப்பை ஏற்றுக்கொண்டது. அந்தக் காலத்தில் கவர்னர்களும், ஆங்கில அதிகாரிகளுமே தோட்ட முதலாளிகளாய் இருந்தனர். பின்னர் வேறு பல ஐரோப்பிய முதலாளிகள் போட்டியிடவே, பெரும்பாலான இலங்கைத் தோட்டங்கள் இப்பொழுது அந்த முதலாளிகளுக்கே சொந்தமாய்விட்டன. வெகு சில இந்திய சிங்கள முதலாளிகளும் இருக்கின்றனர். இந்தியத் தொழிலாளர், இலங்கைத் தோட்டங்களில் வேலை செய்ய ஆசைப்பட்டு, இலங்கை வாசிகளைத் தொலைத்துத் தாங்களே இலங்கையை வளைத்துப் பிடித்துக்கொள்ள வேண்டும் என்ற ஆர்வத்துடன் செல்லவில்லை. ஆதியில் அவர்கள் இந்தியாவை விட்டுப் புறப்படவே மறுத்திருக்கின்றனர். அதிலும், முதலில் சென்ற இந்தியக் கூலிகளுக்கு நேர்ந்த விபத்துக்களையும், இலங்கைக் காடுகளில் மலேரியா மக்களை வாரி விழுங்கியதையும் தெரிந்த பின்பு, இங்கிருந்து பசியால் மடிவது அங்கு போய்ச் சம்பாதிப்பதிலும் மேலென்று அவர்கள் கருதினர். 1843 – முதல் 1867 – வரை இலங்கைக்குச்

சென்ற 14 - லட்சம் தொழிலாளரில் 4,60,000 பேர் இறந்தொழிந்தனர் என்ருல், மேற்கொண்டு அங்கு செல்வது சாவதற்குத்தான் என்று அவர்கள் எண்ணிஞர்கள். ஆயினும், இலங்கை அரசாங்கமும் தோட்ட முதலாளிகள் சங்கமும் பல யுக்திகள் செய்து, இந்தியக் கங்காணிகளிடம் ஏராளமான பணம் கொடுத்து, இந்தியத் தொழிலாளரை வரவழைக்க ஏற்பாடு செய்தனர். முதலில் ஒப்பந்தக் கூலி முறையில், 'இட்ட கட்டளையை மீற மாட்டேன்' என்று உறுதிமொழி எழுதி வாங்கித் தொழிலாளரை அழைத்துக்கொண்டு போன முறையையும், ஒரு நாள் வேலை செய்யாமல் இருந்தால் தொழிலாளரைக் கைது செய்து ஒரு மாதம் சிறைத்தண்டனை விதிப்பதையும், பெண்டுகள் குழந்தைகளுடன் கூட்டோடு ஜெயிலில் அடைப்பதையும் நாளடைவில் மாற்றினர்கள். தொழிலாளர் நிலைமையை விசாரிக்கக் கமிஷன்கள் ஏற்பட்டன. இந்திய அரசாங்கமும் இடையிடையே தலையிட்டது. குறைந்த பட்சக் கூலி விகிதம் நிர்ணயிக்கப் பட்டது. வேலை நேரம் நிர்ணயிக்கப்பட்டது. ஆயினும், யார் முயற்சியால், என்ன செய்யப்பட்டாலும், தொழிலாளர் நிலைமை மகா மோசமாகவே இருந்து வந்திருக்கிறது. அவர்களுக்கு ஏற்பட்ட கடன் சுமைகளில் இருந்து அவர்களால் மீள முடியாமலே போய்விட்டது. சட்டங்களும் திட்டங்களும் சிறிது சிறிது நன்மை செய்தாலும், சட்டங்கள் நிறைவேற்றப் படும் முறையைப் பார்த்தால் அவை இல்லாமல் இருந்தாலும் ஒன்றுதான் என்று சொல்லும்படி இருக்கிறது. உழைப்பாளர் தலை நிமிர்ந்து ஓர் உரிமையை நிலைநாட்ட முடியாது. தலை நிமிர்ந்தால், வயிறு பட்டினி கிடக்க

சேரும்; வேலையும் போகும்; ரஸ்தாவில் கிடந்து உழல வேண்டியதுதான். இதற்குக் காரணம் காண அதிக சிரமப்பட வேண்டியதில்லை.

இந்த நிலைமைக்குக் காரணம் முதலாளிகள் தொழிலாளர்கள் இரு கட்சியாருக்கும் உள்ள பலாபலந்தான். முதலாளிகள் ஒரு ராணுவத்தைப் போன்ற கட்டுப்பாடும் வலிமையும் பெற்றிருக்கிறார்கள். இலங்கை அரசாங்கமும் அவர்கள் கைக்குள் அடக்கம்—அதாவது அவர்கள் விரும்பியதைச் செய்வது. தேயிலை, ரப்பர், கொக்கோ உற்பத்தி, பக்குவப்படுத்தல், விநியோகம் ஆகிய முறைகளில் மிக நுணுக்கமான ஆராய்ச்சிகள் செய்து அளவற்ற லாபம் அளிக்கும் முறைகளை அவர்கள் கையாளுகிறார்கள். உலகம் முழுவதிலும் இவ்வளவுதான் உற்பத்தி செய்யவேண்டும்; இவ்வளவுதான் செலவழிக்க வேண்டும்; ஒவ்வொரு தோட்டமும் இதற்கு மேல் உற்பத்தியே செய்யக்கூடாது; பயிரிட வேண்டியதே இத்தனை ஏக்கர் நிலம்தான்; பாக்கி இத்தனை ஏக்கர் காடாகவே இருக்கவேண்டும்; அந்தக் காட்டை அழிக்கவும் கூடாது—என்றெல்லாம் அவர்கள் சட்ட திட்டங்கள் செய்துகொண்டு இருக்கிறார்கள் மற்ற உலக முதலாளிகளுடன் சேர்ந்து. ஒரு திருஷ்டாந்தம் பாருங்கள்: 1936–37 ல் உலகம் முழுவதும் தேயிலை குடிப்பவர்கள் உபயோகித்த தேயிலை 8,908 லட்சம் ராத்தல்; 1937–38 ல் 8,599 லட்சம் ராத்தல்; 309 லட்சம் ராத்தல் குறைந்து போய்விட்டது என்பது அவர்களுக்குத் தெரியும். இவ்வளவு துல்லியமான கணக்குகளும், சக்தியும், இந்தியத் தொழிலாளர்

கங்காணிகள், தலைமைக் கங்காணிகளுடைய மனப்பான்மையைப் பற்றிப் பல வருஷங்களாய்த் தெரிந்துகொண்ட அனுபவமும், இந்தியர் நலனுக்காக உழைக்கும் தலைவர்கள் எவ்வளவு உயரந்தான் பறக்க முடியும் என்ற நிச்சயமும் அவர்களுக்கு இருக்கின்றன. அவர்களுக்கு எதிராக உள்ளவர்கள், இலங்கையிலே தேயிலைச் செடிகளின் தூர்களில் 'மாசி' (கருவாடு) விளைந்திருப்பதாக நம்பிப் போனவர்களின் சந்ததியார்களான ஏழு லட்சம் வாயில்லா ஜனங்கள்!

இந்த லட்சக் கணக்கான மக்களின் நிலைமையைச் சில வரிகளில் சொல்லிவிடலாம். தங்களுடைய சொந்தக் குடிசைகளில் அரைவயிற்றுக் கஞ்சியாவது காய்ச்சிக் குடித்துக்கொண்டு வெளியில் வந்து நாள் கூலிக்கு வேலை செய்யும் நமது நாட்டுத் தொழிலாளர்களுக்கும் இவர்களுக்கும் மிகுந்த வித்தியாசமுண்டு. அவர்கள் குடியிருப்பதே தோட்டத்திற்குள் முதலாளிகளால் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கும் குடிசைகளில் ஒவ்வொரு குடிசையிலும் பலர் அடைந்து வாழ்கின்றனர். இக் குடிசைகளின் வரிசைக்கு 'லைன்' என்று சொல்லுகிறார்கள். இந்த லைன்களையும் அவற்றில் வசிப்பவர்களையும், அவர்கள் செய்யும் தொழில்களையும் பார்க்கும் பொழுது நமக்கு ஜெயிலின் நினைவே வரும். ஜெயிலிலும், இந்தக் காலத்தில் புதிய முறையில் கட்டப்பட்டிருக்கும் கட்டிடங்களுள்ள ஜெயிலும், முன் காலத்து ஜெயில் முறையும் கலந்திருப்பதாகச் சொல்லலாம். இந்தப் பயங்கரமான உபமானத்தை இலங்கைத் தோட்டத்திற்குக் கூறலாமா என்று சில நண்பர்கள் நினைக்கலாம். சில

வேறுபாடுகள் உண்டு என்பதை மறைக்கவில்லை. ஆனால், பழைய ஜெயில் முறையின் அடிப்படையான தத்துவமே இந்தத் தோட்டத் தொழிலின் அடிப்படையில் காணப் படும் தத்துவம் என்பதை வற்புறுத்தவே இப்படிக் கூறப் பட்டது. ஒரு கங்காணி எவ்வளவு அதிகத் தொழி லாளரை வரவழைத்து வேலை வாங்குகிறாரோ அவ்வளவு அதிகமான ஊதியம் அவர் பெறுமாறு திட்டம் வைத்திருக் கிறார்கள். வேலை செய்யும் ஆள் ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு தலைமைக் கங்காணிக்கு 2 – சதம், உதவிக் கங்காணிக்கு 2 – சதம் பென்ஸ் காசு என்று கொடுக்கப் படுகிறது. (ஒரு ரூபாய்க்கு 100 – சதம்.) இந்த 4 – சதமும் தொழிலாளர் சம்பளத்தில் பிடித்துக் கொடுப்ப தில்லை. இது வேறு, சம்பளம் வேறு. தொழிலாளரும், உதவிக் கங்காணிகளும், தலைமைக் கங்காணிகளும், யாவருமே தோட்ட சூப்பிரண்டின் தயவை எதிர் பார்த்தே வாழ வேண்டியிருக்கிறது. ஒரு கங்காணி, 25 – வருஷம் உழைத்து ஆயிரக் கணக்காய் லாபம் தேடிக் கொடுத்திருந்தாலும், அவர் தொழிலாளர் சார்பாய் உழைப்பதாய்த் தெரிந்தால், மறு நிமிஷம் அவர் வெளி யேற்றப்படலாம். துரைக்குப் பிடிக்காத கங்காணியே தோட்டத்தை விட்டு (இந்தியாவுக்கு — வேறு இடையில் தங்க இடமும் வசதியும் கிடையாது) வரவேண்டி யிருந்தால், தொழிலாளர் கதி என்ன? சட்டம் சொல்லு கிறது: தோட்டத் தொழிலாளி ஒரு தோட்டத்திலிருந்து நீங்கி வெளியேற வேண்டுமானால் ஒரு மாத நோட்டீஸ் கொடுக்க வேண்டும் என்று. அதே சட்டம் முதலாளி தொழிலாளிக்கு ஒரு மாத நோட்டீஸ் கொடுக்காமலே, ஒரு மாதச் சம்பளத்தை மட்டும் கொடுத்து விரட்டிவிட

அநுமதிக்கிறது. இந்தச் சட்டம் வெகு வேடிக்கையாகத் தினசரி அமுல் நடத்தப்படுகிறது. முதலாளி ஒரு தொழிலாளிக்கு ஒரு மாதச் சம்பளம் கொடுத்து, பற்றுச் சீட்டும் (Discharge Ticket) கொடுத்தனுப்பி விடுகிறார். அவன், உடம்பிலுள்ள உழைக்கும் சக்தியைத் தவிர வேறு ஒரு சொத்தும் இல்லாமல், புறப்படுகிறான். அவன் போகும் பொழுது அவன் மனைவியையும் மக்களையும் அழைத்துக்கொண்டு போக முடியாது. ஏனெனில், அதே சட்டம், முதலாளியால் போகச் சொல்லப்படாமல் இருக்கும் அவன் மனைவி மக்கள் ஒரு மாத நோட்டீஸ் கொடுத்துப் பிறகுதான் வெளியேற வேண்டும் என்று விதிக்கிறது. இந்த ஒரு மாதத்தில் என்னென்ன நேரும் என்பதை நாமே யூகித்துக்கொள்ளலாம். பண்டைக் காலத்தில் அடிமைகள் சந்தைகளில் நிறுத்தப்பட்டு, மகன் ஒருவனுக்கும், மகள் ஒருவனுக்கும், மனைவி ஒருவனுக்கும், தந்தை நான்காவது ஒருவனுக்கும் விற்கப் பட்ட நிகழ்ச்சியை ஞாபகப்படுத்துகிறதல்லவா? ஆனால், தோட்டங்களில் வேலை செய்பவர்களை எல்லாம், மனிதர், மனைவியர், கணவர், மக்கள் என்று பார்த்துக்கொண்டு இருக்க முடியுமா? எல்லாரும் 'மிஷின்கள்' தானே! 'மிஷின்' ஓடுவதற்கு அத்யாவசியமான எண்ணெயை மட்டும் ஊற்றிக்கொண்டு இருந்தால் போதாதா?

ஒரு தோட்டத்தை விட்டு வெளியேற்றப்பட்ட தொழிலாளி அந்தத் தோட்ட முதலாளியிடமிருந்து 'பற்றுச் சீட்டு' வாங்கிக்கொண்டு போனால்தான் மற்றொரு தோட்ட முதலாளி வேலைக்கு எடுத்துக் கொள்வார். இல்லாவிட்டால் அவனுக்கு எங்கும்

TIRUNELVELI MUNICIPAL
Public Library & Reading Room
TIRUNELVELI JUNCTION.



வேலையே கிடையாது. எல்லாத் தோட்ட முதலாளிகளுக்குள்ளும் இப்படி ஓர் ஒப்பந்தம் இருக்கிறது. சட்டமும் இதற்கு மறைமுகமான ஆதரவு கொடுக்கிறது. தொழிலாளி கங்காணியிடமிருந்து வாங்கிய கடனில் பாக்கி இருந்ததானால், அவனுக்குப் 'பற்றுச் சீட்டு' கிடைக்கும் நாள் எந்நாளோ? இவ்வாறு தொழிலாளியின் சுதந்திரம் கட்டுப்படுத்தப் பட்டபின் அவன் எதற்கும் வளைந்து கொடுத்து முதுகெலும்பை ஒடித்துக் கொண்டால் ஒழிய வாழ்வதற்கு வேறு வழி ஏது? தொழிலாளர் கடனைப் பற்றி விசாரித்த கமிஷனின் முன்பு, 'இந்தியத் தொழிலாளி கடனிலே பிறந்து, கடனிலே வாழ்ந்து, கடனிலேயே மரிக்கிறான்!' என்று சொல்லப் பட்டது. இந்தக் கடன் எங்கிருந்து வருகிறது என்பதைப் பார்க்கிலும், கடன் படாமல் எப்படி இருக்க முடியும் என்பதை ஆராய்வதுதான் நலம். ஒரு கூலி கடனே வாங்காமல், ஊரிலிருந்து புறப்பட்டு இலங்கை செல்ல 15 – நாளாகும். 16 – வது நாளில் அவன் வேலைக்குப் போகும் முதல் நாளில் அவன் தலையில் ரூபாய் 20–க்குக் குறையாமல் கடன் நிற்கும். வழிப்பிரயாணச் செலவு, இலங்கை போனவுடன் சட்டி பானை முதலிய சாமான்கள் வாங்கிய வகையில் இந்தக் கடன் ஏற்பட்டுவிடும். பிள்ளையார் சுழி போடும் பொழுதே கடன் ஏறுமானால், முற்றுப்புள்ளி போடும்பொழுது எப்படியாகும்? இடையில் கலியாணம், இழவு, பொங்கல், தீபாவளி முதலியவற்றிற்கும், சொந்த ஊரில் ஏற்படும் நன்மை தின்மைகளுக்கும் செலவழிக்கும் பணமெல்லாம் கடனாக வாங்கப்படுகிறது. கங்காணிகள் கடன் கொடுக்க மறுத்தால், 'எங்கள் பிள்ளை குட்டிகளாவது உங்களுக்கு

உழைத்துக் கட்டும்! பயப்பட வேண்டாம்!' என்று சொல்லித் தொழிலாளர் கடன் வாங்குவது சர்வ சாதாரணம். கங்காணிகள் கடனில்லை யென்று ரொம்ப நிமிர்ந்து நின்றால், தொழிலாளர் அவர்களை விட்டுப் பிரிய நேரிடும். தவிரவும், இந்தியாவில் கஞ்சி குடித்து வேலை செய்யும் தொழிலாளரும் தோட்டங்களுக்குப் போனவுடன் வாழ்க்கைச் செலவை அதிகரித்துக் கொள்ள வேண்டி யிருக்கிறது. காலையில் தேயிலைப் பானம் செய்யாத தொழிலாளர் அபூர்வம். அதுவும் தங்கள் கையாலேயே தினம் பறிக்கும் தேயிலைக் கொழுந்தைப் பருகாமல் இருக்க முடியுமா? தேயிலைப் பானம் அவசியமானல் முதலில் வாரத்திற்கு ½ – ராத்தல் சீனியாவது வாங்க வேண்டும். இலங்கையில் விசேஷமாகக் கிடைக்கும் ருசியான உலர்ந்த மீனை வாங்காமல் இருக்க முடியுமா? அதுதான் ஏழைகளின் விசேஷப் பணியாரம்கூட! முன் காலத்தில் தொழிலாளருக்குப் போர்த்திக்கொள்ளக் கொடுக்கும் கம்பளிகளுக்கு, 'பற்று கம்பளி ஒன்றுக்கு – பற்று கறுப்புக் கம்பளி ஒன்றுக்கு' என்று கணக்கு எழுதுவார்களாம். வாங்கிய கம்பளி ஒன்று கணக்கில் ஏறும்பொழுது இரண்டாகிவிடும் என்று கதை சொல்வார்கள். இப்பொழுது இப்படி எல்லாம் இல்லை என்பதை நம்பிக்கொள்வோம். நேர்மையான கணக்குப் படியே கடன் ஏறிக்கொண்டே போகிறது. முன் காலத்தில் இங்கிருந்து சென்ற லட்சக் கணக்கான தொழிலாளர்கள் தங்கள் கூலிகளைக் கைநீட்டி வாங்காமலே இருந்திருக்கிறார்கள். வருஷம் முழுவதும் 12 – மாதத்தில் தீபாவளிக்கும் பொங்கலுக்கும் மட்டுமே சம்பளம் வாங்குவார்கள். மற்ற நாளெல்லாம் அவர்க

ளுடைய சம்பளங்கள், அவர்கள் கைக்கு வராமலும், கண்ணுக்குப் படாமலுமே, கங்காணிகளிடம் வாங்கிய கடன்களுக்குப் போய்விடும். இப்பொழுது அடிக்கடி தொழிலாளர் காசுகளை நேரிலேயே வாங்குகின்றனர்; கங்காணிகள் பட்டுவாடா செய்வதில்லை. ஆனால், தொழிலாளர் வீடுகளுக்குத் திரும்பும் பாதையில் கங்காணிகள் நின்றுகொண்டு, தம் கணக்குக்கு உரியதை வாங்கிக் கொள்ளுகிறார்கள். ஆளையும் காசையும் கண்ட பிறகு விடுவார்களா? தொழிலாளர்தான், 'கொடுக்கமுடியாது!' என்று தட்ட முடியுமா? மேலும், வாங்கிய கடனைக் கொடுக்காமல் இருக்க என்ன நியாயம்?

இலங்கையில் நான் சந்தித்த பிரபலமான பெரிய கங்காணிமார்களில் ஒருவராகிய ஸ்ரீ. ரங்கசாமிக் கங்காணியாரிடம் கேட்டதில், பல வருஷங்களாய் நம் தொழிலாளர் இருந்த நிலைமைகளைப்பற்றி உருக்கமாகக் கதை கதையாகச் சொன்னார். அவருக்கு 32 – வருஷம் இலங்கைத் தோட்டங்களில் அநுபவம். அவருடைய தந்தையார் இலங்கைத் தோட்டத்தில் 23 – வருஷம் கூலியாக வேலை செய்தவர். அந்த 23 – வருஷம் உழைத்த பின் இந்தியாவுக்கு அவர் திரும்பும் பொழுது அவருக்கு ரூபாய் 150 கடன் இருந்ததாம். இதில் முன் கடன் ரூபாய் 120; வழிச் செலவுக்கு வாங்கிய கடன் ரூபாய் 30; ஆக ரூபாய் 150.

இலங்கைத் தோட்டங்களில் இருந்து இந்தியாவுக்குத் திரும்பி வருகிறவர்களைப் பார்த்தால், ஏதோ அங்கு செழிப்பாகவே வாழ்ந்து வந்திருப்பார்கள் என்று

தோன்றும். இதற்கு முக்கிய காரணம் அவர்கள் கையில் உள்ள குடையும் காலிலுள்ள செருப்பும். உண்மையில் இந்த இரண்டையும் வைத்து நாம் அவர்களுடைய வாழ்க்கையை நிதானித்துவிடக் கூடாது. இலங்கைக்குப் போகிறவர்கள், புறப்படும் பொழுதே, திரும்பி வருகையில் 'கொழும்புக் குடையும் செருப்பும்' வாங்கி வரவேண்டும் என்று தீர்மானித்துக் கொள்வது வழக்கம். பின்னல், அங்கு வசிக்கும்பொழுது இவ்விரண்டும் வாழ்க்கையின் லட்சியமாகிவிடும். தோட்டக்காடுகளில், 'சோ' வென்று கொட்டும் மழையில், தலையில் ஒரு பீற்றல் கம்பளியைப் போட்டுக்கொண்டு சொட்டச் சொட்டப் பகல் முழுதும் நனைந்து வேலை செய்யும் தொழிலாளர் தான் குடையும் செருப்புமாகச் சில சமயங்களில் இங்கே நமக்கு காட்சி தருகின்றனர்.

இலங்கைத் தோட்டங்கள் மூன்று பிரிவாகப் பிரிக்கப் படுகின்றன: மேற்பகுதி, மத்திப்பகுதி, கீழ்ப்பகுதி. இவற்றில் மேற்பகுதி 4000, 5000 அடி உயரமுள்ள குன்றுகள் உள்ள பாகம். மற்ற இரண்டும் உயரத்தில் வரிசையாகத் தாழ்ந்தவை. மேற்பகுதியில்தான் அதிக மழை; வேலை செய்வதும் ரொம்பக் கஷ்டம். எனவே, சம்பள விகிதங்கள் மேற்பகுதியில் இருந்து மற்றப் பகுதிகளுக்கு வரிசைக் கிரமமாகக் குறைக்கப்பட்டு இருக்கின்றன.

**கூலிகள் சம்பள விபரம்:**

| | ஆண் சதம் | பெண் சதம் | குழந்தை சதம் |
|---|---|---|---|
| மேற்பகுதி | 49 | 39 | 29 |
| மத்திப்பகுதி | 43 | 35 | 25 |
| கீழ்ப்பகுதி | 41 | 33 | 24 |

மேலே கண்ட முறைப்படி எல்லாத் தோட்டங்களிலும் நமது தொழிலாளர்களுக்குச் சம்பளம் கொடுக்கப்படுகிறது என்று தீர்மானித்துவிட முடியாது. இப்படிக் கொடுக்கவேண்டும் என்பது சட்டம். சட்டப்படி தொழிலாளருக்கு எட்டு மணி நேரம் வேலை தான் கொடுக்கப்பட வேண்டும். அந்த நேரத்திற்குள், அவர்கள் நியாயமாய்ச் செய்கிற வேலைதான் கணக்கு. கூடுதல் குறைவு என்ற பேச்சுக்கே இடமில்லை. ஆனால், இந்த 8–மணி நேரம் வேலை எந்தத் தோட்டங்களில் அமுல் நடத்தப்படுகிறது என்பதைக் கண்டு பிடிக்கவே முடியாது. ஏனெனில், ஒரு தோட்டத்திலும் அப்படி நடப்பதாய்த் தெரியவில்லை. தேயிலை பறித்தல், முள்ளுக் குத்தல், கவாத்து வெட்டுதல், குழி வெட்டுதல் எல்லாவற்றிற்கும், செய்து முடிக்கும் அளவுக்குத் தக்கபடியே கூலி கொடுக்கப்படுகிறது. ஒருவனோ ஒருத்தியோ குறிப்பிட்ட அளவு வேலை செய்தால்தான் ஒரு நாள் கூலி கொடுக்கப்படுகிறது. இதை 'டாஸ்க்' என்று சொல்லுவார்கள். இந்த 'டாஸ்க்' முறை இருக்கக் கூடாது என்பதற்காகவே சட்டம் நாள் கூலி விகிதத்தை ஏற்படுத்தி யிருக்கிறது. இதனால் பெரும்பாலான தொழி

லாளருக்கு ஒரு நாள் என்பது 48 – மணி நேரமாகவோ, 96 – மணி நேரமாகவோ ஆகிவிடுகிறது. எத்தனை மணி நேரம் வேலை செய்தால் ஒரு நாள் சம்பளம் கிடைக்குமோ அத்தனை மணியும் சேர்ந்துதானே ஒரு நாள் ஆகும்! ஆண்களுக்கு, 100 குழி வெட்டினல் 40, 43 சதம் சம்பளம் என்று தோட்டக்காரர்களாகவே நிர்ணயித்து விடுகிறார்கள். தேயிலைச் செடிகளைக் கவாத்து செய்வதற்கு, 225 முதல் 250 செடிகள் வரை கவாத்து செய்தால் தான் ஒரு நாள் சம்பளம். இது கஷ்டமான வேலை யாகையால் சில சமயங்களில் 6 சதம் கூடுதலாகவும் கொடுக்கப்படும். பெண்கள் 20 ராத்தல் தேயிலைக் கொழுந்து பறித்தால்தான் ஒரு நாள் சம்பளம். கூடுதலாகப் பறிக்கப்படும் ஒவ்வொரு ராத்தலுக்கும் 2 அல்லது 1½ சதம் கொடுக்கப்படும். கூடுதல் தேயிலை எடுப்பது என்பது அபரிமிதமான கொழுந்துகள் தளிர்த்திருக்கும் பொழுதுதான் சாத்தியம். ஆணோ, பெண்ணோ, குழந்தையோ, குறித்த அளவுக்குக் குறைவாக வேலை செய்திருந்தால், வேலைக்குத் தக்கபடி 'அரைப் பெயர், கால் பெயர்' என்று போடப்படும். இந்தப் 'பெயர் போடும்' வித்தையால்தான் தோட்டக்காரர்கள் சட்டத்தை உடைத்தெறிய முடிகிறது. ஒரு நாளைக்கு உரிய சம்பளத்தை வாங்குவதற்கு எத்தனை நாள் வேலை செய்தாலும் கணக்கில் ஒரு நாள் சம்பளமாகவே குறிக்கப்படும். ஒரு தொழிலாளி இன்று பாதி வேலையை மட்டும் செய்திருந்தால், அவன் என்று முழுவேலையையும் முடிக்கிறானோ, அன்றுதான் ஒரு நாள் சம்பளம் கணக்கில் எழுதப்படும். எனவே, குறைந்த பட்சச் சம்பள விகிதச் சட்டத்தை மிகவும் கண்டிப்பாக அமுல் செய்து,

'டாஸ்க்' வாங்குவதை அறவே ஒழித்தாலன்றி ஏழைத் தொழிலாளரின் பொருளாதார நிலை மோசமாய்த்தான் இருக்கும். அரைப் பெயர், கால் பெயர் என்ற பித்த லாட்டங்களுக்கு இடமிருக்கும் வரை அவர்கள் மேலாக வுள்ள பிறருக்கு அடிமைகளாகவே இருக்க நேரும்.

மற்றொரு விபரீதம் என்ன வென்றால், தோட்டங் களில் தேயிலை ஏராளமாய் விளைந்திருந்து, பறித்த தேயிலைக்கும் நல்ல விலை இருந்தால்தான் தொழிலாளர் களுக்கு இடைவிடாத வேலை இருக்கும். தோட்டத்தில் வேலையில்லை என்றால் தொழிலாளருக்குச் சம்பளமும் இல்லை. நாட்டை விட்டு, வெளி நாட்டில், தங்கள் உழைப்பை வைத்தே ஜீவிக்க வேண்டியவர்களுக்கு, வேலையும் சம்பளமும் இல்லாவிட்டால் என்ன செய்ய முடியும்?

இரவு 7 – மணி, 8 – மணி வரையிலும் சில தோட்டங் களில் வேலை வாங்கப்படுகிறது. நடுங்கக்கூடிய குளிர்ச்சி யான மலைச் சரிவுகளில் இப்படி வேலை செய்துவிட்டுத் திரும்பும் தொழிலாளரை நாம் ரஸ்தாக்களிலேயே சந்திக்கக் கூடும். காலையில் எழுந்து 'பரேட்'டுக் களத்தில் (Parade ground) ஆஜர் கொடுப்பதிலிருந்து இரவிலும் வெகு நேரம் வேலை செய்வதையாவது அரசாங்கம் கண்டிப்பாகத் தடுக்கவேண்டும்.

உலகெங்கும் ஆலைத் தொழில்களில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்கள் தக்க சங்கங்களை வைத்துக்கொண்டு இருக்கின்றனர். அந்தச் சங்கங்களினால்தான் அவர்க ளுக்கு வலிமை யுண்டு. அவர்களை ஐக்கியமாகக் கட்டிப்

பிணைப்பது சங்கந்தான். ஐக்கியமே அவர்கள் வலிமை. அவர்கள் விசேஷக் கல்வியறிவு பெற்றிராவிடினும், சங்கத்தின் மூலமும், சங்கத் தலைவர்கள் மூலமும், கொடுமைகளை எதிர்த்து நின்று, தங்கள் நியாயமான உரிமைகளை நிலைநாட்ட முடிகின்றது. இலங்கைத் தோட்டத் தொழிலாளர்கள் நிலைமை இதற்கு நேர் மாருக இருக்கிறது. பொதுவாக நிலத்தில் வேலை செய்பவர்கள், ஆலைத் தொழிலாளர்களைப் போல் விரிந்த மனேபாவமும், எதிர்காலத்தில் நம்பிக்கையும், தியாக புத்தியும், கட்டுப் பாடும், புரட்சிகரமான மனப்பான்மையும் பெறுவது மிகவும் கஷ்டம். தவிரவும், நிலத்தோடு ஒட்டி வளர்ந்த மூடப் பழக்கங்களும், பொய்மைகளும் அவர்களை முன்னேற வொட்டாமல் தடுத்து விடுகின்றன. இதனுல் தான் உழைப்பாளர் போராட்டங்களில், ஆலைத் தொழி லாளரைப் பின்பற்றியே குடியானவர்கள் செல்லு கிருர்கள் — அதுவும் குறித்த ஓர் அளவுக்குத்தான்.

இலங்கைத் தோட்டத் தொழிலாளருக்கு இயற்கை யாக உள்ள குறைபாடுகளுடன், தோட்ட முதலாளிகள் வேறு பல இடையூறுகளையும் செய்து வைத்திருக் கிருர்கள். தோட்டத்தில் உள்ளவர்களைத் தவிர வெளியில் இருந்து யாரும் உள்ளே வரக்கூடாது என்று தோட்டந் தோறும் ஆங்கிலத்திலும் தமிழிலும் எழுதிய போர்டு தொங்கவிடப்பட் டிருக்கிறது. உள்ளே போக சூப்பிரண்டு துரையின் சம்மதம் வேண்டும். இத்தகைய போர்டுகள் யாருக்காக மாட்டப்பட் டிருக்கின்றன? யாரேனும் வழிப் போக்கர் தோட்டத்தைப் பெயர்த்து எடுத்துக்கொண்டு போய்விடுவார்கள் என்ற பயத்தினுலா?

தோட்டத்தில் களவு நடந்தால் மூலை முடுக்குகளில் எல்லாம் போலீஸ் ஸ்டேஷன்கள் இருக்கின்றனவே! அதெல்லாம் காரணம் இல்லை. தொழிலாளர் சார்பாக உழைக்கும் யாரும் உள்ளே புகாமல் இருக்கவே இந்தப் போர்டுகள் பயன்படுகின்றன. தோட்டம் சொந்த நிலமாம். உண்மைதான்; தோட்டம் சொந்தமானால் சொந்தக்காரரே உழைத்துப் பயிரிடுவதுதானே! எப்பொழுது தேச மக்களில் ஆயிரக் கணக்கானவரின் உழைப்பை வைத்துத் தோட்டத்தைச் செழுமைப்படுத்த அவசியம் ஏற்பட்டதோ, அப்பொழுதே அந்த மக்கள் சார்பாகத் தோட்டக்காரருக்குச் சில பொறுப்புக்களும் ஏற்பட்டுவிடுகின்றன. தொழிலாளர் நலனுக்காக உழைப்பவர்கள் அவர்களைச் சந்திக்கவே முடியாமல் செய்துவிடுவது அப் பொறுப்புக்களை நிறைவேற்றுவ தாகாது. தொழிலாளர் தோட்டக்காரருடைய நிலத்தில், அவர்கள் கட்டிக் கொடுக்கும் 'லைன்' களில்தான் வசிக் கின்றனர். 'எங்கள் நிலத்தில், எங்கள் வீடுகளிலே தங்கிக்கொண்டு, எங்களுக்கு விரோதமாய்க் கிளம்புவ தற்கு நாங்கள் சம்மதிப்போமா?' என்று சொன்னால், அதற்குப் பொருளே யில்லை. இடம், வீடெல்லாம் தோட்டக்காரரின் லாபத்திற்காக அமைத்துக் கொடுக்கப் பட்டவையே தவிர வேறில்லை. வீடுகள் இல்லாவிட்டால் தொழிலாளர் குளிரில் விறைத்துக் கிடப்பார்கள். மறுநாள் தோட்ட வேலைகள் யாரை வைத்து நடக்கும்? ஆதலால், பிரசித்தி பெற்ற இந்தியர்களும், தலைவர்களும், தொழிலாளர் நலனைக் கவனிப்பவர்களுமாவது தோட்டங் களுக்குச் செல்ல உரிமை இருக்க வேண்டும். அதற்காகப் போதிய கிளர்ச்சி செய்ய வேண்டியது அவசியமாக

இருக்கிறது. தொழிலாளர் வெளி உலகத்தோடு சம்பந்தமே வைத்துக்கொள்ள முடியாது தடுக்கும் முறையை முதலில் தகர்த்தெறிய வழி செய்ய வேண்டும்.

தோட்டங்களுக்கு வெளியில் உள்ளோர் போக முடியவில்லை. தொழிலாளராவது வெளியே வந்து ஏதாவது சில இடங்களில் சங்கங்கள் அமைத்து வேலை செய்கிறார்களா என்றால், அதுவும் இல்லை. 'சங்கம் வைப்பதற்கு நிலம் எங்கிருக்கிறது? எல்லா நிலங்களும் துரைகளுக்குத்தானே சொந்தம்!' என்று சொல்லப் படுகிறது. எந்தப் பாகங்களில் இடங்கள் கிடைக்குமோ ஆங்காங்கு தொழிலாளர் ஸ்தாபனங்கள் ஏற்பட வேண்டும். சங்க சம்பந்தமான காரியங்களுக்குத் தோட்டங்களுக்கு உள்ளேயும் இடையூறுகள் இருக்கக் கூடாது. சரியான தொழிலாளர் சங்கங்கள் ஏற்பட்டு, உழைப்பாளர் கூடிப் பேசும் உரிமை பெறுகிற வரையில், அவர்களுக்கு ஒருவித முன்னேற்றமும் ஏற்பட முடியாது. பரோபகாரமுள்ள சிலர், சில காலம், அவர்களுக்கு உழைக்கலாம். ஒளிந்து மறைந்து சில நன்மைகளையும் செய்யலாம். இதெல்லாம் கடலில் பெருங்காயம் கரைப்பதே யாகும். தொழிலாளர், தாங்களே விழித்து எழுந்து, தங்கள் உரிமைகளைப் பெறப் போராட முன் வந்தாலொழிய விசேஷ நன்மை ஏற்படாது. எனவே, தொழிலாளர் நன்மையில் அக்கறை கொண்டவர்கள் முதலாவதாக அவர்கள் சங்கமாகக் கூடும் உரிமையை (Right of Association) நிலைநாட்ட முற்படவேண்டியது அவசியம்.

தோட்டங்களிலே சூப்பிரண்டுகளுக்கு அடுத்த படியாக, கங்காணிகள், 'கண்டாக்குகள்' (Conductors), கணக்குப் பிள்ளைகள், டீ மேக்கர்கள் முதலியோர் இருக்கின்றனர். கடைசிப் படியில் தொழிலாளர்கள். அவர்கள் இலங்கைக்கு வரவோ, அங்கிருக்கவோ காரணமானவர்கள் கங்காணிகள். முன் காலத்தில் கங்காணிகளுக்கு நல்ல செல்வாக்கு இருந்திருக்கிறது. சீமையிலிருந்து ஒன்றும் தெரியாமல் இலங்கை வந்து சேரும் சின்னத் துரைமார்கள் பல்லாக் காரியங்களுக்கும் அவர்கள் தயவையே எதிர்பார்த்திருந்தனர். இப்பொழுது துரைமார்களின் சௌகரியம் போல் எல்லாம் கங்காணிகள் நியமிக்கப்படுகின்றனர். கங்காணிகளையும் மேல் பார்க்க 'கண்டாக்குகள்' மாதச் சம்பளத்திற்கு நியமிக்கப் படுகின்றனர். 'கண்டாக்கு'களும் கங்காணிகளும் எப்பொழுதும் ஒத்துப் போவதில்லை. தொழிலாளருக்கும் இவர்களுக்கும் முரண்பாடுகள் ஏற்படுகின்றன. தொழிலாளரும் கொஞ்சம் கொஞ்சம் விழிப்படைந்து வருவதாலும், தோட்டங்களிலேயே பிறந்து வளர்ந்த பல வாலிபர்கள் கூடியவரை முயன்று பிரசாரம் செய்வதாலும், சட்டசபைத் தேர்தல்களினாலும், தொழிலாளர் இடையே விழிப்பு ஏற்பட்டு வருகிறது. தொழிலாளர்—கங்காணி—'கண்டாக்கு' முரண்பாடுகள் இருக்கும் வரை துரைமார்களுக்கு நன்மைதான். இவர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்தால்தான் அவர்களுக்கு ஆபத்து. தொழிலாளரின் அறியாமையும், கங்காணிகளின் சுயநலமும், இவர்களோடு 'கண்டாக்கு'களுக்குச் சம்பந்தமின்மையும் நிலைத்திருக்கத் துரைமார் வேண்டிய ஏற்பாடுகள் செய்திருக்கின்றனர்.

இலங்கைப் பெரிய கங்காணிமார்கள் தனிச் சங்கம் வைத்திருக்கிறார்கள். பெரிய கங்காணிமார்களின் சக்தி தொழிலாளரையே பொறுத்திருப்பதால், அவர்கள் சங்கமும், அவர்களுக்குக் கீழ் உள்ள மற்ற கங்காணி மார்களும் தொழிலாளர் நலத்தோடு தங்கள் நலத்தையும் சேர்த்துப் பாவித்து அதற்காக உழைக்க வேண்டும். பெரிய கங்காணிமார்களில் பலர் மிக்க நாகரிகமும், செல்வமும், கல்வியறிவும் படைத்திருப்பதோடு, அன்றாடம் உலக விஷயங்களை அறிந்தவர்களாகவும் இருக் கிறார்கள். அவர்கள் யாவரும் தங்கள் செல்வாக்கை உபயோகித்துத் தொழிலாளரை விழிப்படையச் செய்ய வேண்டும். அறியாமையில் உழலும் தொழிலாளர் கங்காணிகளுக்கும் ஆபத்தாகவே இருப்பார்கள். முதலில் தொழிலாளரை விழிப்படையச் செய்யவேண்டும்; வாய் இல்லாப் பூச்சிகளாகிய அவர்களைப் பேச வைக்க வேண்டும்.

கடைசியாக ஒரு விஷயத்தைக் குறிப்பிட வேண்டியது அவசியம். தொழிலாளரை அடித்து ஹிம்சிக்கும் முறை இன்னும் தோட்டங்களில் மறைய வில்லை என்று பலவிதப் புகார்கள் வருகின்றன. மோசமான கொடுமைகள் பலவும் அடிக்கடி இழைக்கப் படுகின்றன.

மேலே கூறப்பட்ட பலவிதக் கஷ்டங்களுக்கு நடுவே நமது தொழிலாளர்கள் தோட்டக்காடுகளில் வேலை செய்து வருகிறார்கள். இவர்களுடைய வாழ்க்கையைக் கண்டு பொறாமைப் படக்கூடிய சிலர் இருக்கிறார்கள் என்றால் நமக்கு ஆச்சரியமாக இருக்கும். அச் சிலர்

தான் சிங்கள ராஜீயத் தலைவர்கள். இவர்கள் அடிக்கடி சட்ட சபைகளிலும், பொதுக் கூட்டங்களிலும் இந்தியர்களைப் பற்றித் தாறுமாருகப் பேசுவார்கள். 'நமது தோட்டங்களில் எல்லாம் இனி நம்மவர்களுக்கே வேலை கொடுக்கும்படி செய்யவேண்டும்!' என்று இவர்கள் வானமளாவப் பேசுவார்கள். இவர்களுக்கும் சிங்களப் பொது ஜனங்களுக்கும் அதிகத் தொடர்பு கிடையாது. அதனல்தான் இவர்களுடைய துவேஷப் பிரசாரம் பொது மக்களிடையே அதிகம் ஊடுருவிப் பாயவில்லை. இத்தனை நாளாகச் சிங்களவர்கள் என்ன செய்துகொண்டு இருந்தார்கள்? அவர்கள், இந்தியர்களைப் போல், அவ்வளவு கஷ்டப்பட்டு வேலை செய்ய மாட்டார்கள். இயற்கைச் செழிப்பு வாய்ந்த இலங்கையிலேயே வாழ்ந்து வந்ததால் அதிக வேலை செய்யும் சுபாவம் அவர்களிடம் இல்லை. தவிரவும், அவர்கள் வீடுகளை விட்டுத் தோட்டக் காடுகளில் சென்று வசிக்க மறுப்பார்கள். அப்படியே வசித்து வேலை செய்ய இசைந்தாலும், குறைந்த கூலிக்கு அதிக வேலை செய்ய மாட்டார்கள்; இழைக்கப்படும் கொடுமைகளை யெல்லாம் தலை வணங்கித் தாங்கிக்கொண்டிருக்க மாட்டார்கள். 'இப்படிப்பட்டவர்கள் நம்மவர்களுடன் சேர்ந்து தோட்டங்களில் வேலை செய்தாலாவது நம்மவர்களுக்கும் ரோஷமும் சூடும் உண்டாகும்.... அப்புறம் கவலையில்லை' என்று தொழிலாளருக்காக உழைத்து வரும் ஓர் அன்பர் கூறுவது வழக்கம். ஆனல், சிங்களவர்களில் பெரும்பாலார் தோட்டங்களில் வேலை செய்வது துர்லபமான விஷயமே. நம்மவர்களும், எவ்வளவு கஷ்டமாக இருந்தாலும், இலங்கையில்தான் இருப்பார்கள். ஏனெனில், அவர்களில் பெரும்பாலார்

இலங்கையிலே பிறந்து வளர்ந்த இலங்கையர்தானே! மேலும், இலங்கைக்குச் சென்ற தொழிலாளர்கள் இங்கு உள்ள வறுமையைத் தாங்கமாட்டாமல்தானே, 'வருவது வரட்டும்' என்று போனார்கள்! மேலே சொல்லப்பட்ட ஸ்ரீ. ரங்கசாமிக் கங்காணி சொல்வதுண்டு: 'நாங்கள் இந்தியாவுக்கு வரும்பொழுது, "இந்தக் கங்காணி வர மாட்டாரா இலங்கைக்குக் கூட்டிக்கொண்டு போக?" என்று ஜனங்கள் காத்துக்கொண்டே யிருப்பார்கள்.' காய்கின்ற சட்டியில் கிடந்து வதங்குகிறவர்களுக்கு ஒரு மாறுதல் வேண்டும் என்று தோன்றுவது இயல்பே. ஆனால், கடைசியில், மாறுதல் வேண்டியது, சட்டியில் இருந்து அடுப்பில் குதித்தது போல் இருக்கிறது.

## 4. அஞ்சா நெஞ்சம் படைத்த

# ஆசிரியர் பரம்பரை

நீர் மேல் நடக்கலாம், நெருப்பில் குளிக்கலாம், நெரிஞ்சி முள்ளின்மேல் படுக்கவும் செய்யலாம். இவைகளைப் பார்க்கிலும் கடினமான வேலை அடிமை நாட்டில் ஒரு தேசியப் பத்திரிகையை நடத்துவது. அதிகாரம் முழுதும் அந்நியர் கையில் இருக்கும். சுற்றிலும் கோடிக் கணக்கான ஜனங்கள் தங்கள் நிலைமையை உணராமல் வெறும் 'ஜோ-ஹுகும்'களாக ('என்ன உத்தரவு, யசமான்?' என்று கேட்டுக்கொண்டு) நிற்பார்கள். இவர்களின் நடுவே, இவர்களுடைய ஆதரவைக் கொண்டே, தேசியப் பத்திரிகையின் ஆசிரியர் அடிமைத் தனத்திற்கு எதிராகத் தம்முடைய கைவரிசைகளைக் காட்ட வேண்டும்; சுதந்திர பேரிகையை முழக்க வேண்டும். பத்திரிகையைப் படித்த பாமர ஜனங்கள் மிரளாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். அதிகாரிகளின் அடக்குமுறைப் பாணங்களுக்குத் தப்பிப் பிழைக்க வேண்டும். எப்பொழுதும் காலத்திற்கு மூப்பாக, முன்னேறிவரும் ஜனங்களுக்கு முன்னால் போய் நின்று, வழி காட்டவேண்டும். பத்திரிகை பல கட்சிகளுக்கும் பொது ஸ்தலமாக விளங்கவேண்டும்; ஆனால், எந்தக் கட்சியின் ஆதிக்கியத்திற்கும் உட்பட்டு விலையாகிவிடக் கூடாது. சுருக்கமாய்ச் சொன்னால், ஜனங்களின்

உள்ளமும் ஆன்மாவும் விடுதலை அடைவதற்காக, ஆசிரியர் தம் உடலைக்கூட அடிமைப்படுத்தி வைக்க நேரிடும். தேசீயப் பத்திரிகையே அதிகாரிகள் கண்ணில் துரும் பாகக் குத்திக் கொண்டிருக்கும். வருஷக் கணக்காக அதிகாரிகள் கட்டிவரும் கோட்டைகளை, ஒரே நாளில், ஒரு தேசீயப் பத்திரிகை உடைத்துத் தள்ளி விடுவது என்றால், யார்தான் பொறுத்துக்கொண்டு இருக்க முடியும்? இக் காரணத்தால், நம் தேசத்தில், பல சபயங் களில் விலங்கிடப்பட்ட கைகளே அநேகம் பத்திரிகை களில் எழுதி வருகிறதைத் தினமும் பார்க்கிறோம். நம் பத்திரிகை ஆசிரியர்கள், உதவி ஆசிரியர்களில் அநேகர் சிறை சென்று மீண்டவர்கள். பிற நாடுகளைப் போல்; தினந்தோறும் சிறிது நேரம் மேஜையருகே அமர்ந்து பேனாவை ஓட்டிவிட்டுப் பெரும் பணம் சம்பாதிப்பது இங்கே நடக்க முடியாத காரியம். ஒரு முறை பேனாவை ஓட்டு முன்பு, அதனால் வரக்கூடிய விபத்தை ஆசிரியர் ஏற்றுக்கொள்ளத் தயாராய் இருக்க வேண்டும். ஆசிரியர் தலைக்கு மேலே மெல்லிய நூலில் ஒரு வாள் தொங்கிக்கொண்டே யிருக்கும். நூல் அறுந்து வாள் எந்த நேரத்திலும் அவர் தலைமேலே விழுந்து விடக்கூடும். அதற்காக, அவர் தலை நிமிர்ந்து, வாளையே பார்த்துத் திகைத்துக் கொண்டிருந்தால், பேனா ஓடாது, பத்திரி கையும் வராது. பெரு முயற்சி செய்து அவர் எழுதினா லும், எழுத்துக்கள் அவருடைய கோழைத்தனத்தின் சித்திரங்களாகவே இருக்கும். நாடும் நகரும் அவை களைப் பார்த்துச் சிரிக்கும். பொது ஜனங்கள் வீரத் தையும் வெற்றியையுமே வழிபடுவார்கள். ஆசிரியர் வீரமாக எழுதவேண்டும்; வெற்றிக்கும் வழி காட்ட

வேண்டும். தலைக்கு நேரே தொங்கும் வாளை அறவே மறந்துவிட்டால்தான் இது சாத்தியமாகும்.

இல்லாவிட்டால், அரசாங்கத்தை முழுதும் ஆதரித்து, அதிகாரிகளுடைய அதிக்கிரமங்களைப் பூசி மெழுகிக் கொண்டு இருக்கலாம். இதனால் பத்திரிகை அடக்கு முறை ஆபத்திலிருந்து தப்பித்துக் கொள்ளலாம். ஆனால், பொது ஜனங்கள் பத்திரிகையைக் கையால் தீண்ட மாட்டார்கள். ஏனென்றால், பத்திரிகை வெறும் சர்க்கார் கெஜட்டாகத்தானே இருக்கும்!

'அமிர்த பஜார் பத்திரிகை' முதலில் கூறிய வழியைப் பின்பற்றி, எல்லையற்ற துன்பங்களைத் தாங்கித் தப்பிப் பிழைத்திருக்கிறது. 76-வருஷமாக, 1868-ம் வருஷத்திலிருந்து இன்று வரை, அது பொதுஜனத் தொண்டு செய்து வருகிறது. அதன் ஆசிரியர்களான 'கோஷ்' குடும்பத்தார் இந்திய நாட்டின் தேசீய கௌரவத்தை இந்த 76-வருஷமாகக் காத்து வந்திருக்கிறார்கள். ஒரு பத்திரிகைக்கோ, ஒரு குடும்பத்திற்கோ, பெருமைப்படத் தக்க விஷயம் இதைவிட வேறு என்ன வேண்டும்?

அமிர்த பஜார் என்பது வங்காளத்திலே ஒரு பட்டிக் காடு. அங்கேதான் கோஷ் குடும்பம் வசித்து வந்தது. அந்தக் குடும்பத்தில் வசந்த குமார் கோஷ், ஹேமந்த குமார் கோஷ், ஸிஸிர் குமார் கோஷ், மோதிலால் கோஷ் என்ற நான்கு சகோதரர்கள் இருந்தார்கள். இவர்களில் வசந்த குமார்தான் முதலில் ஒரு பத்திரிகை ஆரம்பித்து நடத்த வேண்டும் என்று எண்ணங் கொண்டார். அவருடைய கையிருப்புத் தொகை ரூபாய் 300! அரைப்

பணத்திலே கலியாணம், அதிலே கொஞ்சம் வாண வேடிக்கையும் நடத்த வேண்டும் என்பது போல், ரூபாய் 300 ல் அச்சு இயந்திரம், ஈய எழுத்துக்கள், கடுதாசி எல்லாமே வாங்கிவிட வேண்டும் என்று சொல்லி, அவர் தம்முடைய தம்பி ஸிஸிர் குமாரைக் கல்கத்தாவுக்கு அனுப்பி வைத்தார். ஸிஸிர் புறப்பட்ட பொழுது, எந்தக் காகம் வலமாயிற்றோ, எந்தச் சுமங்கலி எதிரே வந்தாளோ, தெரியவில்லை. அந்த நாள் நம் தேசத்திற்கு ஒரு நன்னாள் ஆயிற்று. வீரமும் உண்மையும் கொண்ட கோஷ் சகோதரர்களின் அரிய ஊழியத்தினால் பிற்காலத்தில் எத்தனையோ மக்களுக்கு நன்மை உண்டாயிற்று. கல்கத்தாவில் இருந்து ஸிஸிர், மரத்தினால் செய்யப்பட்ட ஒரு பழைய அச்சு யந்திரத்தையும், அடித்துத் தேய்ந்துபோன கொஞ்சம் எழுத்துக்களையும் வாங்கி வந்தார். முதலில், 'அமிர்தப் பிரவாஹினி' என்று ஒரு பத்திரிகையை அவர்கள் நடத்தி வந்தார்கள். பின்னால், 'அமிர்த பஜார்' பத்திரிகை 1868, மார்ச் மாதம் ஆரம்பிக்கப்பட்டது. அதுவரை இளமை காரணமாகப் பத்திரிகை வேலைகளில் சம்பந்தப்படாமல் விலகியிருந்த கடைசி சகோதரர் மோதிலாலும் அச்சமயம் மற்ற சகோதரர்களுடன் சேர்ந்து கொண்டார். இவர்தான் பிரசித்தி பெற்ற மோதிலால் கோஷ். தொண்டு கிழமாகும் வரை இவர் 'அமிர்த பஜார்' பத்திரிகைக்கு ஆசிரியராக இருந்து, தேசீய வெறி குன்றாது, வீரத்தில் மாசு ஒட்டாதபடி, ஊழியம் செய்து வந்தார்.

வங்காளத்திலே எப்பொழுதும் எவர் ஒரு நல்ல காரியத்தை ஆரம்பித்தாலும் உடனே பத்துப் பேர் கூடி

அதற்கு ஆதரவு கொடுப்பார்கள். ஏதோ இளைஞர்கள் கூடி வேடிக்கையாக 'அமிர்த பஜார்' பத்திரிகையை ஆரம்பித்த போதிலும், புகழ்பெற்ற தலைவராகிய ஆனந்த மோகன் போஸ், பிரபல வக்கீலான கிஷோரிலால் சார்க்கர் முதலியோர் அதற்குக் கட்டுரைகள் எழுதி உதவினார்கள். 'ஆசியாவின் ஆஸ்தான கவி' என்று புகழ் பெற்ற நம் கவியரசர் ரவீந்திரநாத தாகூர் முதல் முதல் எழுதிய பாட்டு அதில்தான் வெளிவந்தது. அப்பொழுது தாகூருக்கு வயது 14. ஸிஸிர் குமார் பத்திரிகைக்கு எழுதுவதோடு நில்லாமல், தாமே எழுத்துக் கோத்து, தாமே அச்சிட்டும் வந்தார். இந்த வேலைகள் போதா என்று, நாளடைவில் அச்சு மை கூட்டுவதையும் கற்றுக்கொண்டு தாமே தயாரித்து வந்தாராம். சமயங்களில் பக்கத்து ஊர்களுக்குப் போய், கையினால் செய்த காகிதங்களும் வாங்கிக்கொண்டு வருவாராம். இப்படித் தயாரிக்கப்பெற்ற 'அமிர்த பஜார்', மகாத்மா காந்தியின் 'ஹரிஜன்' 'நவஜீவன்' பத்திரிகைகளைக் காட்டிலும் சுத்த சுதேசிச் சரக்கு என்று சொல்லலாம்! 'அமிர்த பஜார்' வங்காளி பாஷையில் வாரப் பத்திரிகையாக நடத்தப்பட்டு வந்தது என்பது மிக முக்கியமான விஷயம்.

'அமிர்த பஜார்' தோன்றிய வருஷத்திலேயே சென்னையில் 'மெட்ராஸ் மெயில்' என்ற ஆங்கிலப் பத்திரிகையும் ஆரம்பமாயிற்று. 'அமிர்த பஜார்' இந்தியா இந்தியர்களுக்கே உரியது என்று, ஆரம்பம் முதல் தேசியப் பிரசாரம் செய்து வந்தது. வங்காளத்துக் குழந்தைகள், அதனால் அறிவு பெற்று, தேசபக்தி

கொண்டு, பின்னல் தேசியவாதிகளாக முன் வந்தார்கள். இதுபோலவேதான் 'மெட்ராஸ் மெயி' லும் ஒருவகையில் தேசத்தொண்டு செய்து வந்திருக்கிறது. சில சமயங்களில் பரம ராஜவிசுவாசிகள்கூட அதைப் படித்து, வெறுப்படைந்து, தேசிய அபிமானம் கொள்வதுண்டு.

1871–ல் 'அமிர்த பஜார்' கல்கத்தாவிலிருந்து வெளியிடப்பட்டது. ஸிஸிர் குமாருக்குத் திடீரென்று 800 ரூபாய் கிடைத்திருந்தது. அதில் 600 ரூபாய்க்கு ஒரு புது அச்சு இயந்திரத்தை வாங்கினர். பத்திரிகை ஆங்கிலமும் வங்காளியும் கலந்த வாரப் பதிப்பாக வெளி வந்தது. நாள்தோறும் அதன் செல்வாக்கு வளர்ந்து கொண்டே வந்தது. ஜனங்கள் அதை அன்புடனும் ஆதரவுடனும் பாராட்டினர்கள். தயவு தாட்சண்ய மில்லாமல், பத்திரிகை நீதி நிறைந்த நெடுந் தர்ம நெறியில் நடந்து வந்தது. அடிக்கடி அதிகாரிகளுடைய தவறுதல்களை அது கண்டித்து வந்தது. ஒரு சமயம், ஓர் ஐரோப்பிய டிப்டி மாஜிஸ்திரேட் ஒரு ஸ்திரீயை மானபங்கம் செய்ததாகப் பத்திரிகையில் செய்தி வந்தது. இதற்காக அதிகாரிகள் வழக்குத் தொடுத்தார்கள். பத்திரிகையை அச்சிட்டவரும், செய்தியை எழுதியனுப்பியவரும் தண்டிக்கப்பட்டனர். ஸிஸிர் குமார் மட்டும் தண்டனையில் இருந்து தப்பினர். 'அமிர்த பஜார்' என்றுலே அதிகாரிகளுக்குப் பயமாகிவிட்டது. அன்று முதல், அல்லற்பட்டு அழுபவர்களின் கண்ணீரைத் துடைப்பதும், அக்கிரமங்களை அம்பலத்திற்குக் கொண்டுவருவதும், தேச மக்களைத் தட்டி எழுப்புவதும், முதலாளிகளுக்கு எதிராக

உழைப்பாளரின் நலனுக்காக உழைப்பதும் 'பத்திரிகை'யின் தொழிலாக விளங்கின.

லிட்டன் பிரபு இந்தியாவுக்கு வைஸ்ராயாக வந்த பின்பு, பத்திரிகைகளின் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்த சில யோசனைகள் செய்யப்பட்டன. அச்சமயம் ஸர் ஆஷ்லி ஈடன் வங்காளத்தில் லெப்டினன்ட் கவர்னராக இருந்தார். அவர் ஸிஸிர் குமாரை அழைத்து, நேரில் சில விஷயங்களைப் பேசினார். எப்படியாவது 'அமிர்த பஜாரை'க் கைவசப்படுத்தி, அதை அரசாங்க ஆதரவாக நடக்கும்படி செய்துவிட வேண்டும் என்பது அவர் ஆவல். பத்திரிகையை அச்சிடுவதற்கு முன்னால், முக்கியமான விஷயங்களைத் தம்மிடம் காட்டிக்கொள்ள வேண்டும் என்றும், எந்த விஷயங்களைப் பற்றி எழுதினாலும் எப்படி எழுத வேண்டும் என்பதைப் பற்றித் தம்மிடம் கலந்து கொள்ள வேண்டும் என்றும் அவர் ஆசிரியரிடம் கூறினார். ஸிஸிர், தம் கண்களையும் காதுகளையும் நம்பாமல் திகைத்தார். ஒரு வீர தேசீயப் பத்திரிகாசிரியரிடம் ஒரு கவர்னர் இப்படிப் பேசுவது உண்மையாக இருக்குமா என்று அவர் சந்தேகப்பட்டார். கவர்னர் கூறியது உண்மைதான். அப்படி நடக்கவேண்டும் என்றே அவர் விரும்பினார். ஸிஸிர் இணங்கவில்லை. உடனே ஸர் ஆஷ்லியின் முகம் மாறிவிட்டது. கோபத்தால் அவர் குமுறினார். ஆசிரியர் ஏன் தம் கருத்துக்கு இணங்க முடியாது என்று அவர் கேட்டார். ஸிஸிர், நிதானமாக ஒரு பதில் கேள்வி கேட்டுவிட்டுத் திரும்பிவிட்டார்: 'லெப்டினன்ட் கவர்னர் அவர்களுக்கு இந்தத் தேசத்தில்

கண்யமான ஒரு பத்திரிகாசிரியன்கூட இருக்கக்கூடாது என்று உத்தேசமா?'

1878-ல் சுதேச பாஷைப் பத்திரிகைகளின் சட்டம் என்று ஒரு சட்டம் இயற்றப்பட்டது. தேச பாஷைப் பத்திரிகைகளுக்கு இதனுல் மிகுந்த சங்கடம் ஏற்பட்டது. வங்காளத்தில் 'அமிர்த பஜார் பத்திரிகை' ஒன்றுக் காகவே இந்தச் சட்டம் அமுல் நடத்தப்பட்டதோ என்று எண்ணும்படி இருந்தது. சட்டம் மார்ச் மாதம் 14-ம் தேதி நிறைவேறியது. 'அமிர்த பஜா'ரின் அடுத்த இதழ் 21-ம் தேதி வெளிவர வேண்டியிருந்தது. அன்று பத்திரிகை முழுதும் ஆங்கிலப் பத்திரிகையாக வெளி வந்துவிட்டது! சட்டம் தேச பாஷைப் பத்திரிகைகளுக் குத்தானே! 'அமிர்த பஜார்' ஆங்கிலப் பத்திரிகையாகி விட்டது. பாஷை ஆங்கிலமே தவிர, விஷயம் எல்லாம் பழைய அக்னி அஸ்திரங்கள்தான்.

பின்னல், ரிப்பன் பிரபு வைஸ்ராயாக இருந்த பொழுது, 1881-ல் மேலே கூறிய கொடிய சட்டம் வாபஸ் வாங்கப்பட்டது. பிற்போக்கான ஐரோப்பியர் களின் எதிர்ப்பை யெல்லாம் எதிர்த்துத் தகர்த்து, ரிப்பன் பிரபு பிடிவாதமாக நின்று சுதேசப் பத்திரிகைகளின் வாய்ப்பூட்டைத் திறந்து வைத்தார்.

1885-ம் வருஷம் காங்கிரஸ் மகாசபை தோன்றியதி லிருந்து பத்திரிகைகளுக்கு நல்ல காலம் பிறந்தது. தேசிய இயக்கத்தைப் பத்திரிகைகள் வளர்த்தன; இயக்கமும் பத்திரிகைகளுக்கு உற்ற துணையாக இருந்து வந்தது. காங்கிரஸ் தோன்றுமுன் தோன்றியது 'அமிர்த பஜார்'.

ஆனால், காங்கிரஸ் செய்ய வந்த வேலையையே அது செய்து வந்தது. உலகம் எல்லாம் இருள் சூழ்ந்திருந்த பொழுது, நம் வேதங்கள், 'தெய்வம் ஒன்றுதான்; அறிஞர்கள் அதைப் பல பெயரிட்டு அழைக்கிறார்கள்' என்று ஞானச் சுடரைப் பரப்பியதாகச் சொல்லுகிறோம். இதுபோலவே, இந்தியா முழுதும் அரசியல் வானத்தில் இருள் சூழ்ந்திருந்த பொழுது, 'அமிர்த பஜார்' போன்ற சில பத்திரிகைகளே வழிகாட்டி வந்தன என்று சொல்ல வேண்டும். 'அமிர்த பஜா'ரின் சார்பாக மோதிலால் கோஷ் அநேகமாக ஒவ்வொரு காங்கிரஸ் கூட்டத்திற்கும் விஜயம் செய்திருக்கிறார். மீன் குஞ்சுக்கு நீச்சுப் பழக்க வேண்டுமா? மோதிலால் உயிரோடு இருந்தவரை தம் பத்திரிகையைக் காங்கிரஸின் கோட்டையாக அமைத்துப் பாதுகாத்து வந்தார்.

•

நாளுக்கு நாள் தேசியப் பிரச்னைகள் பெருகி வந்தன. தேசிய எழுச்சியும் ஜ்வாலையுடன் வீசி வளர்ந்து வந்தது. அந்த நிலையில், அரசாங்கம் ஹிந்து விவாக சம்பந்தமாக ஒரு சட்டம் இயற்ற முன் வந்தது. பெண்களின் சம்மத வயது 12-க்குக் குறையாமல் இருக்க வேண்டும் என்பதே சட்டத்தின் கருத்து. பால கங்காதர திலகர் முதல் தேசத் தலைவர்கள் அனைவரும், தேசியப் பத்திரிகைகளும், அரசாங்கம் மத விஷயங்களில் தலையிடுவதை விரும்பவில்லை. எங்கும் எதிர்ப்பு ஏற்பட்டது. ஒரே வாரத்தில் 'அமிர்த பஜார்' தினசரிப் பத்திரிகையாக மாற்றப்பட்டது. 1891-ம் ஹூ பிப்ரவரி மீ 19உ அத் தினசரியின் முதல் இதழ் பிரசுரமாயிற்று. கல்கத்தாவில், ஆனந்த சட்டர்ஜி சந்தில், 2-ம் நெம்பர் கட்டிடத்தில்

இருந்து 'அமிர்த பஜார்' 1874 முதல் இன்று வரை பிரசுரமாகி வருகிறது.

'அமிர்த பஜார் பத்திரிகை'யின் ஆசிரியராகவும், எழுத்துக் கோப்பவராகவும், அச்சிடுபவராகவும், மை கூட்டுபவராகவும் இருந்த ஸிஸிர் குமார் கோஷின் தவப் புதல்வர்தான் துஷார் காந்தி கோஷ். இவரே அவருடைய கடைசிக் குமாரரும், ஜீவந்தரா யிருக்கும் ஒரே புதல்வரும் ஆவார். இவர் பத்திரிகையை ஏற்றுக்கொண்டு நடத்தி வந்த காலத்திலும் எத்தனையோ இடையூறுகளும், துன்பங்களும் நேர்ந்தன. 1932-ல் ஒரு கொலை வழக்கு சம்பந்தமாகக் கோர்ட்டை அவமதித்ததாக இவர் மீது வழக்குத் தொடரப்பட்டு, ரூபாய் 500 அபராதம் விதிக்கப் பட்டது. 1930-ம் வருஷத்துச் சட்டமறுப்பு இயக் 'கத்தின் போதும் 'அமிர்த பஜார்' கடுமையான அடக்கு முறைகளுக்கு உள்ளாயிற்று. ரூபாய் 6,000 ஜாமீன் கட்ட வேண்டும் என்று அதற்கு உத்தரவிடப்பட்டது.

'அமிர்த பஜார்' தோன்றிய காலம் அசாதாரண மான காலம். அக்காலத்தில் இந்தியாவும், முக்கியமாக வங்காளமும், கொடுந் துன்பங்களுக்கு உள்ளாகி யிருந்தன. கோஷ் சகோதரர்கள் பிறப்பிலேயே கர்ம வீரர்களாயும், போர் வீரர்களாயும் விளங்கியதால், அஞ்சா நெஞ்சத்துடன் அவர்கள் தேச சேவை செய்ய முடிந்தது. அவர்களுடைய பத்திரிகை தோன்றிய இரண்டு வருஷங் களுக்கு உள்ளாகவே வெளி நாடுகளிலும் அதன் பெயர் தொனிக்க ஆரம்பித்துவிட்டது. 1878-க்குப் பின் ரஷ்ய அரசாங்கம் அப் பத்திரிகையை வரவழைத்து, அதில் உள்ள முக்கியமான விஷயங்களை மொழிபெயர்த்து

ரஷ்யப் பத்திரிகைகளில் வெளியிட ஏற்பாடு செய்து வந்தது. ஓர் இந்தியப் பத்திரிகையிலிருந்தே விஷயங்களை எடுத்துப் பிரசுரித்து ஆங்கிலேயருக்கு எதிராக ரஷ்ய அரசாங்கம் பிரசாரம் செய்து வந்தது என்பதைக் கண்டு இந்திய சர்க்கார் மனம் புழுங்கியது. பத்திரிகையின் ஆசிரியரைக் கூப்பிட்டுப் பேசியதில், அவர் ரஷ்ய அரசாங்கத்தின் சந்தாவை இழக்கத் தயாராக இல்லை என்று சொல்லிவிட்டார்.

1883-ம் வருஷம் இல்பர்ட் மசோதா சம்பந்தமான கிளர்ச்சியிலும் 'அமிர்த பஜார்' தலைமை வகித்து நின்றது. அதற்கு முன்னால் இந்திய மாஜிஸ்திரேட்டுகள், ஐரோப்பியர்களை நீதி விசாரணை செய்ய அதிகாரம் இல்லாமல் இருந்தார்கள். ஐரோப்பிய நீதிபதிகளுக்கும் இந்திய நீதிபதிகளுக்கும் இடையே இருந்து வந்த இந்த வேற்றுமையை ஒழிக்க வேண்டும் என்று சட்ட அங்கத்தினர் ஸர் கோர்ட்னி இல்பர்ட் இந்த மசோதாவைத் தயாரித்திருந்தார். உடனே வங்காளத்திலிருந்த ஆங்கிலேயர் எல்லோரும் ஒன்று சேர்ந்து ஏகமாகக் கூச்சல் போட ஆரம்பித்தனர். சுதேசிகளை வாய்க்கு வந்தபடி ஏசலாயினர். மசோதா சட்டமானால், சிங்கத்தைப் பார்த்து நாய் குரைக்க ஆரம்பித்துவிடும் என்று எச்சரிக்கை செய்தனர். வங்காளிகளும் விடவில்லை. விழித்துக்கொண்டு எழுந்து நின்று போராடினார்கள். 'உண்மையான சிங்கமாக இருந்தால் நாய் அதைக் கண்டு பயப்படும். ஆனால், கழுதை சிங்கத்தின் தோலைப் போர்த்திக்கொண்டு நின்றால், நாய் அதைப் பார்த்துக் குரைக்கவும் செய்யும், கடிக்கவும் செய்யும்!' என்று

வங்காளி பாபுக்கள் பதிலுக்கு கர்ஜித்தார்கள். தேசீயப் பத்திரிகைகளும் பெரும் போர் தொடுத்தன. நீதி விசாரணையில், பாரபட்சம் இல்லாமல் நடந்துகொள்ள மறுத்து, ஆங்கிலேயருக்கு என்று தனியாக வெள்ளைக் கார மாஜிஸ்திரேட்டுகள் வேண்டும் என்று கேட்பவர்கள் வெறும் 'கோழைகள்' என்று 'அமிர்த பஜார்' ஆணித் தரமாக எழுதிற்று. மசோதா பின்னால் வாபஸ் வாங்கப் பட்ட போதிலும், இந்தியர் எதிர்ப்பின் ருசியை அதிகாரிகள் ஓர் அளவு அறிந்துகொள்ள இந்த இயக்கம் உதவியாக இருந்தது.

1896-ல் பம்பாயில் பஞ்சமும் பிளேக் நோயும் ஏற்பட்ட சமயத்தில் 'அமிர்த பஜார்' அம் மாகாணத்து மக்களுக்காக அருமையான ஊழியம் புரிந்து வந்தது. லோகமான்ய திலகருக்கு அது சொந்தப் பத்திரிகை மாதிரி விளங்கியது. அவர் கல்கத்தா சென்ற பொழு தெல்லாம் அப் பத்திரிகாலயத்தில்தான் தங்குவது வழக்கம். வங்காளப் பிரிவினைக் காலத்திலும், காந்திஜியின் சத்தியாக்கிரகம், சட்டமறுப்பு முதலிய இயக்கங்களிலும் 'அமிர்த பஜார்' அரும் பெரும் ஊழியம் புரிந்து வந்திருக் கிறது. சுதேச சமஸ்தானங்களுக்கும் அது ஆப்த நண்பனுக இருந்து வருகிறது. அதிகார வர்க்கத்தின் கொடுமைகளுக்கு ஆளான. பரோடா மகாராஜா, ரீவா மகாராணி, போபால் பேகம், காஷ்மீர் மகாராஜா முதலி யோர் துன்பப்பட்ட சமயங்களில் 'பத்திரிகை' அவர் களின் கண்கண்ணுக விளங்கியது.

அதர்மம் மலிந்து, தர்மம் நசித்துப் போகும்போது; பகவான் அவதரிப்பார் என்று நாம் நம்புவது வழக்கம்.

ஆனல், இந்த இருபதாம் நூற்ருண்டில், பகவான் சங்கு, சக்கரம், மழு ஒன்றும் ஏந்தி வருவதில்லை; நல்ல பேளு ஒன்றையே ஏந்திக்கொண்டு, அவர் பத்திரிகாசிரியராகவே அவதரிக்கிருர் என்று சொல்லலாம். ஜனங்களின் சுதந்திரம், தர்மத்தின் பாதுகாப்பு எல்லாவற்றிற்கும், வீரருடைய வாளைக் காட்டிலும், பத்திரிகாசிரியருடைய பேளுவே மிகச் சிறந்த பாதுகாப்பாக விளங்குகிறது. இவ்வளவு உத்தமமான உன்னதமான தொழில் பூரண சுதந்திரத்துடன் விளங்க வேண்டும் என்பதே ஒவ்வொரு நாட்டின் கோட்பாடாகும். எந்த நாட்டில் எழுத்துச் சுதந்திரம் (பத்திரிகைச் சுதந்திரம்) இல்லையோ, அந்த நாட்டில் வேறு எந்தச் சுதந்திரமும் நிலைக்காது. பத்திரிகைச் சுதந்திரத்திற்கு இரண்டுவித இடையூறுகள் ஏற்படலாம். ஒன்று அதிகார வர்க்கத்தின் மூலம் வரும்; மற்றது பத்திரிகை முதலாளிகளின் மூலம் வரும். வெறும் பண ஆசை கொண்டு, ஒரு கொள்கையும் இல்லாது அலையும் முதலாளிகளிடம் உண்மையான பத்திரிகாசிரியர் வேலை பார்ப்பதைப் போன்ற துர்ப்பாக்கியம் வேறில்லை. அப்படிப் பார்க்கவும் கூடாது. வெறும் பண மூட்டைகளையே எதிர்த்து வெல்ல முடியாத ஆசிரியர், கோடிக் கணக்கான மக்களின் சுதந்திரத்திற்காக எப்படிப் போராடுவார்? வல்லமை மிகுந்த அரசாங்கங்களையும், படைகளையும், ஏகாதிபத்தியங்களையும் எதிர்த்து அவர் பேளு என்ன செய்துவிட முடியும்?

'அமிர்த பஜார் பத்திரிகை' இந்திய ஆசிரியர்களுக்கு ஒரு வழிகாட்டி. 'அமிர்த பஜார் பத்திரிகைக்கு ஜே!' என்ருல், சத்தியத்திற்கு ஜயம், தியாகத்திற்கு ஜயம், இந்திய தேசீயத்திற்கு ஜயம், சுதந்திர தேவிக்கு ஜயம் என்றே கருத வேண்டும்.

# 5. தேசீய மறுமலர்ச்சி

1600-ம் ஹு டிசம்பர் மீ 31உ, இங்கிலாந்தில் ஆட்சி புரிந்துவந்த எலிஸபெத் மகாராணி, கிழக்கிந்தியத் தீவுகளில் வர்த்தகம் செய்வதற்காக லண்டனில் அமைக்கப்பட்ட கம்பெனியை அங்கீகரித்து அநுமதிப் பத்திரம் ஒன்றும் கொடுத்தார். அதிலிருந்து ஆங்கிலேயருக்கும் இந்தியாவுக்கும் உள்ள தொடர்பு ஆரம்பமாயிற்று.

1072-ல் இந்தியாவுடன் வர்த்தகம் செய்து வந்த ஆங்கிலக் கம்பெனிகள் யாவும் ஒன்று சேர்க்கப்புட்டு ஐக்கிய கிழக்கிந்தியக் கம்பெனி ஸ்தாபிக்கப்பட்டது. அதிலிருந்து இந்தியாவின் சரித்திரத்தில் ஒரு புதிய சகாப்தம் ஆரம்பமாயிற்று; இந்தியாவின் கதி ஒரு புதிய திசையை நோக்கித் திரும்பியது. வியாபாரம் செய்து வந்த வர்த்தகர்கள் நாடு பிடிக்க ஆரம்பித்தனர். அதுவரை உலகில் நாடு பிடிப்பதற்குப் பெரிய யுத்தங்கள் செய்தது உண்டு. ஆனல், இந்தியா யுத்தத்தில் ஜயிக்கப்படவில்லை; வியாபாரத்தில் கெலிக்கப்பட்டது. குண்டுகளும், வாளும், வேலும் எறியப்படாமல், மிளகும், கிராம்பும், கண்ணுடியும், பீங்கானும் விற்றுவந்த வர்த்தகக் கூட்டத்தாரால் இந்தியா பெறப்பட்டது சரித்திரத்தின் மகத்தான ஆச்சரியங்களுள் ஒன்று. கிளைவ் என்னும் சாமர்த்தியம் உள்ள வாலிபர் 1758-ல் கம்பெனியின் கவர்னராக வந்தார். அவரே ஆங்கில ராஜ்யத்திற்கு இந்தியாவில்

அடித்தளம் கட்டியவர். பின்னர் வந்த கவர்னர்களும் வைஸ்ராய்களும் அவர் ஆரம்பித்த வேலையை முடித்து வைத்தனர். இவ்வாறு கிழக்கிந்தியக் கம்பெனியின் வரவு செலவு கோஷ்பாராவின் ஆதாயக் கணக்கில் சுமார் 2,000 மைல் நீளமும் அகலமும் உள்ள பாரத தேசம் சேர்ந்துவிட்டது.

இந்தியாவின் சரித்திரம் என்னும் சமுத்திரத்தில் ஆங்கில ஆதிக்கம் ஒரு துளியே ஆகும். பாரசீகம், அஸீரியா, மிசிரம் முதலிய நாடுகள் நாகரிகத்தில் தலைமை வகித்து விளங்கியது போல், இந்தியாவும், உலக நாகரிகத்தின் உச்சத்தை அடைந்து, பல்லாயிரம் ஆண்டுகள் வாழ்ந்திருக்கின்றது. அந்த நாடுகள் எல்லாம் வீழ்ந்து, ஒழிந்தன. ஆனால், இந்தியா இன்றும் அழியாது தலை நிமிர்ந்து நிற்கின்றது. அதன் சரித்திரத்தின் பெரும் பாகம் பழமையில் மறைந்து கிடக்கின்றது. ஆங்கிலேயர் இந்தியாவுக்கு வரும்பொழுது இந்தியா அநாகரிக மக்களின் அன்னையாக விளங்கவில்லை. உலகிற்கு நாகரிகம் புகட்டிய உத்தம நாடாகவும், சகல வளங்களும் நிறைந்து செல்வம் கொழிக்கும் நாடாகவும் திகழ்ந்தது. சரித்திர பூர்வமாக சுமார் 7,000 வருஷங்களுக்கு இந்தியாவின் வாழ்வு தெளிவாய்ப் புலனாகின்றது. எனவே, ஆங்கிலேயர் ஆதிக்கம் நிலைபெற்ற சுமார் ஒன்றரை நூற்றாண்டு இந்திய சரித்திரத்தில் மிகச் சிறு பாகமேயாகும். அவர்கள் வருவதற்கு முன்னால் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக, இந்தியா, அவர்கள் உதவியில்லாமல், மிக உயர்ந்த முறையில் தன்னரசு கொண்டு விளங்கி வந்தது. அவர்கள் இந்தியாவை விட்டுச் சென்ற பின்னும், இந்தியா

தனியே, தானே, தன் விஷயங்களைக் கவனித்துக்கொள்ள முடியும் என்பதற்கு வேறு என்ன அத்தாட்சி வேண்டும்? இதற்கு எதிராக ஏதேனும் காரணங்கள் இருப்பின், அக் காரணங்களுக்குக் காரணம் வேற்றார் ஆதிக்கமேயாகும்.

இதிகாச காலம் முதற்கொண்டே இந்தியாவை ஒரே ஐக்கிய ராஜ்யமாக அமைப்பதற்குச் செய்யப்பட்ட முயற்சிகள் புலனாகின்றன. பற்பல ஜாதி சமயத்தின ராகப் பிரிந்திருக்கும் ஹிந்துக்களின் புண்ய க்ஷேத்திரங்கள் பதிரியிலிருந்து குமரி வரையிலும், துவாரகையிலிருந்து ஜகந்நாதம் வரையிலும் பரந்து கிடப்பது நாட்டாரின் ஐக்கியத்தைக் காட்டுவதாகும். சரித்திர காலத்தில் சந்திர குப்தர், அசோகர், அக்பர் சக்கரவர்த்திகளின் ஆட்சியில் பெரும்பாலான இந்தியா ஒரே ஏகாதிபத்தியமாக விளங்கி யிருந்தது. ஆனால், பரிபூர்ணமான ஐக்கியம் அடிமைத் தளையினால்தான் ஏற்படவேண்டி யிருந்ததுபோலும்! இன்று இந்தியா முழுதும் ஒரு குடைக்கீழ் ஒன்றுபட்டு விளங்குகின்றது. வெளியிலிருந்து புகுத்தப்பட்ட இந்த ஒற்றுமை, அடிமை மணம் கமழும் இந்தக் கூட்டுறவு, என்றும் நிலையாய், இந்த நாட்டின் இயற்கைக்கு ஏற்ப அமைந்து, பரிபூர்ண சுதந்திரத்துடன் கூடிய கூட்டுறவாக இலங்கும் காலம் தொலைவில் இல்லை. இன்று ஆதிக்கம் பெற்றுள்ளவர்களின் நன்மைக்காக ஒன்று சேர்க்கப் பட்ட அங்கங்கள், ஒன்றோடொன்று இயற்கையாகவே பொருந்தி, ஒரே இரத்தம் ஓடக் கூடிய ஒரு பேருரு வத்தின் உறுப்புக்களாக அமைந்து, 40 கோடி மக்களின் வலிமை பெற்ற விசுவரூபமாக விளங்குவதை நாளைக் காண்போம். அடிமையில் ஒற்றுமைப்பட்டு விளங்கும்

இந்தியாவே விடுதலையில் ஒன்றுபட்ட இந்தியாவுக்கு வழிகாட்டியாகும்.

* * *

பிரிட்டிஷ் ஆட்சி ஏற்பட்டதும் வங்காளத்தின் நிலைமைகள் மாறின. பிரிட்டிஷ் ஆட்சிமுறை அதிக விசாலமாயும் ஆழமாயும் அமைக்கப்பட்டு இருந்தது. முகம்மதியர் காலத்தில் எவ்வளவு செல்வங்களை அபகரித்த போதிலும், அவர்கள் இந்நாட்டிலேயே தங்கி இந்நாட்டு ஜனங்களாகவே வாழ்ந்தனர். பிரிட்டிஷ் ஆதிக்கம் அரசியலில் மட்டுமின்றி, நாகரிகத்திலும், கலைகளிலும், கல்வியலும், மதத்திலும் பிரவேசித்ததைக் கண்ட ஜனங்கள் இங்கிலாந்தைப் பார்த்து அதைப் போலவே இந்தியா ஒரு காப்பியாக (பிரதியாக)த் தயாரிக்கப் படுவதாய் எண்ணினார்கள். மதத்திலும் நாகரிகத்திலும் இந்தியரின் பிடி சிறிது தளர்த்தப்பட்டால்தான் ஆட்சிக்கு வலிமை அதிகரிக்கும். ஏனெனில், தீவிர மதப்பற்றே தேசீய வெறியாக வெளிவருவது இயற்கை. ஆதியில் கிறிஸ்தவப் பாதிரிமார்களுடைய பிரசாரத்திற்கு எதிர்ப்புத் தோன்றியதற்கு இதுவே காரணம். முதலில் வங்காளத்தில் அச்சியற்றும் தொழிலைக் கொணர்ந் தவர்கள் அவர்கள்தான். கல்வியைப் பரப்புவதற்கு அவர்கள் செய்த முயற்சிகள் பற்பல. சுகாதாரம், சிகிச்சை முதலிய வழிகளில் அவர்கள் எவ்வளவோ பாடுபட்டிருக்கிறார்கள். ஆயினும் மதத் துவேஷமும், இந்தியாவோடு சம்பந்தப்பட்ட ஒவ்வொரு விஷயத்திலும் வெறுப்பும் அவர்களிடம் குடிகொண்டிருந்தன. மேலும் பைபிளை முதலில் அனுப்பி, அதைத் தொடர்ந்து பட்டா

ளத்தையும் அனுப்புவது மேல் நாட்டார் வழக்கமாக இருந்தது. இக்காரணங்களால் முன்னால் எழுச்சி பெறாத வங்காளத்தில் ஒரு புதிய உணர்ச்சி பரவியது.

ஆரம்பத்தில் ஆங்கில ஆட்சி இந்தியா முழுவதும் வியாபிக்கவில்லை. வங்காளமும் மதராஸின் ஒரு பாகமுமே அதற்கு உட்பட்டிருந்தன. வங்காளத்தில் அதற்கு எதிராகப் பெரும் கிளர்ச்சிகள் நடைபெறாமல் இருந்த போதிலும் சன்னியாசிக் கலகம் போன்ற சிறு கலகங்கள் மட்டும் இடையிடையே நேர்ந்தன. நாட்டில் கொள்ளைகள் முற்றிலும் நின்றுவிடவில்லை. பிரிட்டிஷ் அரசாங்கம் தீர்வைகள் வசூலிப்பதும் கஷ்டமாக இருந்தது. ஜனங்களிடம் நேரில் சென்று வசூலித்தவர்கள் அவர்களுடைய அதிருப்தியைப் பெற்றனர். நாடு முழுதும் கிராமங்கள் சிதறிக் கிடந்ததாலும், ஒவ்வொரு கிராமமும் ஒரு குடியரசாய் விளங்கியதாலும் பழைய கட்டுப்பாடுகளை உடைத்துப் புதிய ஆதிக்கத்தை நிலை நிறுத்துவது கடினமாக இருந்தது. காசியைப் பற்றிய ஒரு பழைய சரித்திரம் அங்கு நகர சபைக்கு ஜனங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்ததாயும், போலீஸ்காரர்கள் கூடத் தேர்ந்தெடுத்தே நியமிக்கப்பட்டதாயும் கூறுகின்றது. ஜனநாயக முறையில் இவ்வளவு முன்னேற்றம் அடைந்தவர்களைத் திடீரென்று அடக்கியாள்வது சுலபமன்று. மேலும், அரசாங்க வரி வசூல் அதிகாரிகள் ஜனங்களிடமிருந்து அளவற்ற திரவியத்தைக் கொள்ளையிடுவதும் இயற்கையாயிருந்தது. இதனால் சர்க்கார் சில பணக்காரர்களை வரி வசூலிக்க நியமித்தனர். அந்த முறையும் சரியாக நடைபெறவில்லை. பின்னர் சிலர் வரிகளை வசூலித்துக்கொண்டு சர்க்கா

ருக்குக் குறிப்பிட்ட தொகையைக் குத்தகையாகச் செலுத்திவிட வேண்டும் என்று ஏற்பாடு செய்யப் பட்டது. இதனால் அரசாங்கத்தின் கௌரவம் மிகவும் குறைந்து போயிற்று. மற்றும் கம்பெனி புரோக்கர் களாக நியமிக்கப்பட்ட இந்தியர்கள் ஒழுக்கம் இன்றிப் பண ஆசையுடன் எதை வேண்டுமாயினும் செய்து வந்ததால் ஜனங்களின் வெறுப்பு நாளுக்கு நாள் வளர்ந்து வந்தது.

போதாக் குறைக்கு நாட்டின் கைத்தொழில்களை அழிப்பதற்கு கம்பெனியார் பல ஏற்பாடுகளைச் செய்தனர். அழகிய மஸ்லின்களையும் சல்லாக்களையும் நெய்து வந்த நெசவாளர்கள் கம்பெனியின் தொழிற் சாலைகளில் வந்து வேலை செய்யலாமே ஒழியத் தத்தம் வீடுகளில் வேலை செய்யக்கூடாது என்று விதிக்கப் பட்டது. உத்தரவை மீறியவர்களின் கைப் பெருவிரல்கள் துண்டிக்கப்பட்டனவாம். 18-ம் நூற்றாண்டின் பிற்பகுதி வரை இந்தியப் பொருள்கள் இங்கிலாந்தில் மலிவாக விற்கப்பட்டு வந்தன. ஆனால், அடுத்த நூற்றாண்டில் இந்தியக் கைத்தொழில்கள் நசுக்கப்பட்டு, சீமையில் இந்தியச் சாமான்களுக்குப் பளுவான இறக்குமதித் தீர்வைகள் விதிக்கப்பட்டு, உள்நாட்டு மூலப் பொருள்கள் கப்பலேறவும், சீமையிலிருந்து உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள் இறக்குமதியாகவும் ஏற்பாடு செய்யப் பட்டது. இதனால் வேலையில்லாத் திண்டாட்டமும் வருமானக் குறைவும் ஏற்பட்டன. அன்று தொடங்கிய வேலையின்மையும், பசிப் பிணியும், பஞ்சமும் இன்று தேச முழுதும் பரவி நிரந்தரமாய் நிலைத்து நிற்கின்றன.

குறைகள் பலவாகப் பெருகி யிருந்தபோதிலும் ஜனங்களிடையே எதிர்ப்புணர்ச்சி தடிப்பேறவில்லை. தேசம் அனைத்தும் ஒரே உயிர் என்ற எண்ணம் தோன்றவில்லை. அகில பாரதமும் ஒரே மூச்சில் விடுதலை பெற்று இலங்கவேண்டும் என்ற ஆதர்சம் பிரகாசிக்க வில்லை. இதற்கு முன்னால் ஏற்பட்ட எழுச்சிகளும் சரியான வழி காட்டிகளாய் விளங்கவில்லை. ரஜபுத்திரர்களின் எழுச்சி ஒரு குறுகிய எல்லைக்கு உட்பட்டிருந்தது. மராட்டியர் செய்த பெருமுயற்சி தங்களுடைய விடுதலையையும் ஒரு மராட்டிய ராஜ்ய ஸ்தாபனத்தையுமே குறியாகக் கொண்டு இருந்தன. அக்காலத்து வங்காளியர், மராட்டியரை விடுதலை வீரராகக் கருதாமல், கொள்ளைக்காரராகவே எண்ணியிருந்தார்கள். வங்கத் தாய்மார்கள், 'மராட்டியர் வந்து விட்டனர்! தூங்குங்கள்!' என்று கூறிப் பயமுறுத்திக் குழந்தைகளைத் தாலாட்டுவது வழக்கமாக இருந்தது. மராட்டியர் பொதுஜன அபிமானத்தையும் ஆதரவையும் பெறவில்லை. சுருங்கச் சொன்னால் அகில பாரத ஐக்கியமும், தேசீய உணர்ச்சியும் அக்காலத்தில் இல்லை.

ஆங்கிலேயர் தங்களுக்கு வேண்டிய குமஸ்தாக் களையும், அடிமைகளையும் தயாரித்துக்கொள்ள ஆங்கிலக் கல்வி முறை ஒன்றை ஏற்படுத்தினர். ஆங்கிலக் கல்வியினால் இந்தியாவுக்கு லாபமும் உண்டு, நஷ்டமும் உண்டு. மேல்திசை நாகரிகத்தின் போக்கையும், சுதந்திர அரசியல் ஸ்தாபனங்களின் வளர்ச்சியையும், அறிவுப் பெருக்கையும் தெரிந்துகொள்ள அது அவசியம். ஆனால், அரசியலில் அடிமைப் படுத்தப்பட்ட இந்தியரின் உள்ளத்

தையும் அது அடிமைப்படுத்தி விட்டது. அரசாங்கத்திற்கு ஏராளமான குமாஸ்தாக்களும் ஊழியர்களும் தயாரிப்பதற்கு ஆங்கிலக் கல்வி அவசியமாக இருந்தபோதிலும், அதனால் ஜனங்களிடையே பெரிய கிளர்ச்சியும் சுதந்திரத் தாகமும் ஏற்படும் என்று சில அதிகாரிகள் பயந்தனர். அதனாலேயே முதலில் ஆங்கிலக் கல்வியைப் பரப்புவதற்கு அரசாங்கம் முன்வரவில்லை. 1820 – ம் வருஷம் கல்கத்தாவில் ஹிந்து கலாசாலை நிறுவப்பட்டது. அது முதல் தேசத்தில் எங்கணும் ஆங்கிலக் கலாசாலைகளும், பள்ளிக்கூடங்களும், சர்வகலாசாலைகளும் தோன்ற ஆரம்பித்தன.

ஆரம்பத்தில் ஆங்கிலக் கல்வியைப் பரப்புவதற்கு அதிகாரிகள் தயங்கி நின்றது வீணான பயத்தினால் அன்று. கவியரசாகிய ரவீந்திரநாத தாகூரின் பாட்டனாரான துவார்க்கநாத தாகூர் ஒரு சமயம் எல்லேன்பரோ பிரபுவிடம் பேசிக்கொண்டு இருந்தாராம். அப்பொழுது எல்லென்பரோ பிரபு இந்தியர்கள் ஆங்கிலக் கல்வி பயின்றால் ஆங்கிலேயரை ஆறு மாதத்தில் துரத்தி யடித்துவிடுவார்கள் என்று கூறினார். அதற்கு துவார்க்கநாதர், 'இல்லை, பிரபுவே! ஆறு வாரத்தில் விரட்டி விடுவார்கள்!' என்றாராம். இதற்கு மாறாக எவ்வாறோ ஆங்கிலக் கல்வி இந்தியாவில் நிலைபெற்றுவிட்டது.

வாரன் ஹேஸ்டிங்ஸ் காலத்தில் அவராலும் அவருடைய உதவி அதிகாரிகளாலும் பெரும் பணம் திரட்டிக்கொண்டு போகப்பட்டது பிரசித்தமான விஷயம். கார்ன்வாலிஸ் பிரபுவின் காலத்தில் மிகப் பெரிய மைசூர்


செ. திவான் M.A., M.Phil.,
சுஹைனா பதிப்பகம்

யுத்தம் நடந்தது. ஹைதரும் திப்புவும் அடக்கப்பட்டனர். மராட்டியர்களின் உட்பகை எதிரிகளால் நன்கு பயன் படுத்திக் கொள்ளப்பட்டது. கடைசி பீஷ்வா பாஜீராவ் காவலில் வைக்கப்பட்டார்.

சீக்கியர் 1849 – ல்தான் முற்றிலும் அடக்கப் பட்டனர். அவர்களுடைய வீரப் போராட்டங்கள் ஆச்சரியமானவை. ஆயினும் அவை அகில இந்தியச் சுதந்திர யுத்தங்கள் அல்ல. சிறுபான்மை வகுப்பினரின் போராட்டங்களாகவே இருந்தன. தேசம் முழுதும் அவர்களுக்கு உதவியாய்ச் செல்லவில்லை.

பின்னால் டல்ஹவுஸி காலத்தில் பற்பல வழிகளில் ராஜ்யங்கள் சேகரிக்கப்பட்டு ஆட்சி முறை மிகவும் பலமாய் வேர் ஊன்றியது. ஜான்ஸி, நாகபுரி முதலிய ராஜ்யங்களை அவர் அபகரித்த முறை மிகவும் வெறுக்கப் பட்டது. கொடுமைகள் காரணமாக நாட்டில் பகைமை உணர்ச்சி அதிகரித்தது. ஹிந்துக்களும் முஸ்லிம்களும் ஒன்று சேர்ந்தனர். பட்டாளங்களில் உள்ள இந்திய சிப்பாய்களுக்குச் செய்திகள் அனுப்பப்பட்டன. எங்கும் சதியாலோசனை நடந்தது. சிப்பாய்களிடம் இயற்கையி லேயே மிகுந்த மனக்கொதிப்பு இருந்து வந்தது. அவர்க ளுக்கும் ஐரோப்பிய ஸோல்ஜர்களுக்கும் அளவற்ற வேற்றுமை பாராட்டப்பட்டதை அவர்கள் வெறுத்தனர். நாலா பக்கத்திலும் துவேஷம் முற்றியவுடன் பெரிய யுத்தமும் தோன்றியது.

1857 – ம் வருஷத்துச் சுதந்திர யுத்தத்திற்கு நேர் நூறு வருஷங்களுக்கு முன்புதான் — அதாவது 1757 – ல்

தான் — பிளாஸியில் வங்காள நவாப் ராஜ்யம் இழந்தது. சுதந்திரப் போரிலே ஐக்கிய மாகாண ஹிந்துஸ்தானிகள் அதிகப் பங்கெடுத்துக் கொண்டனர். யுத்தம் பாரக்பூரில் ஆரம்பித்து, காசி, டில்லி முதலிய எல்லா நகரங்களுக்கும் பரவியது. சிப்பாய்கள், மன்னர்கள், ஹிந்துக்கள், முஸ்லிம்கள் யாவரும் கலந்து போராடினர்.

போராட்டத்தின் மத்தியிலே டில்லியில் வெற்றி கிடைத்தவுடன் கலகப் படைகள் இந்தியாவின் சுயேச்சையைப் பிரகடனப் படுத்தவில்லை. குடியரசை ஸ்தாபிக்க முன் வரவில்லை. ஆனால், பழைய டில்லி சக்ரவர்த்தியைத் தேடிப்பிடித்துக் கொண்டுவந்து மறுபடி சிம்மாசனத்தில் வைக்க முயன்றன. ‘டில்லீச்வரனே ஜகதீச்வரன்’ என்பது அவர்கள் நம்பிக்கை. இதனால் அவர்களுக்குப் போதிய சுதந்திர ஜனநாயகத் தத்துவங்கள் இல்லை யென்பதும், இந்தியா முழுதும் ஒன்று என்ற ஐக்கிய உணர்ச்சி அவர்களுக்கு அதிகம் இல்லை யென்பதும் தெளிவாகின்றன.

சுதந்திர யுத்தத்திலே பீஹார் செய்த பெருந் தியாகங்களும், ஜான்ஸி ராணி, குமார் ஸிங் முதலிய பலருடைய வீரப் போராட்டங்களும் பல நூல்களில் எழுதி வெளியிட வேண்டிய விஷயங்கள். ஆனால், எழுச்சியை அடக்குவதற்குக் கம்பெனி அரசாங்கத்தால் கையாளப்பட்ட முறைகளை அநேகம் ஐரோப்பிய ஆசிரியர்களே பயங்கரமாக வருணித்திருக்கிறார்கள். ஹிந்துஸ்தானிகளைச் சுடுவதற்குத் தோட்டாக்களைக் கூடச் செலவழிக்கக் கூடாதென்று, அவர்கள் தலைப்பாகைத் துணிகளையே

அவிழ்த்து ரஸ்தாவில் இருந்த மரங்களில் அவர்களைத் தூக்கில் இடும்படி உத்தரவுகள் போடப்பட்டன என்றால், துவேஷ அனல் எவ்வளவு பற்றி யெரிந்தது என்பதை நாமே யூகித்துக் கொள்ளலாம்.

அந்த யுத்தத்தில் சிப்பாய்களுக்கு ஏற்ற தலைவரில்லை. சீக்கியர்கள் ஆங்கிலேயருக்கு உதவியாய் நின்றனர். இதுவே தோல்விக்கு ஒரு மூல காரணமாயிற்று. மேலும், தேசீய உணர்ச்சியும் ஐக்கியமும் மிகவும் குறைவாக இருந்தன. எனவே, போர் தொடங்கியவர்கள் தோல்வி யடைந்தனர்.

1857 போராட்டத்திற்குப் பின்னர், வட இந்தியா முழுதும், பயங்கரமான கஷ்டங்களுக்குப் பின் தோன்றும் அயர்வில் ஆழ்ந்துவிட்டது. அந்த நூற்றாண்டின் பிற்பகுதியில் மறுபடி வங்காளம் தலைதூக்க ஆரம்பித்தது. இலக்கியத்திலும் மற்ற துறைகளிலும் அங்கே மறுமலர்ச்சி ஏற்பட்டது. சுரேந்திரநாத பானர்ஜி, விபினசந்திர பாலர், பங்கிம் சந்திரர் போன்ற பல மேதாவிகள் முன் வந்தனர். எங்கும் அவர்கள் விடுதலைப் பேரிகையைக் கொட்டி முழக்கினார்கள். பத்திரிகைகள், பிரசங்கங்கள், பஜனைகள் முதலிய பல உருவங்களில் தீவிரமான பிரசாரம் தொடங்கிற்று.

பொதுவாகவே தேசத்தில் வெறும் பிரேம தர்மம் என்ற பெயரால் வீரம் பாழாக்கப் பட்டதாகக் கருதப் பட்டு, உணர்ச்சியும், தைரியமும் பெருகத்தக்க முறையில் தேசீயப் பிரசாரம் செய்யப்பட்டது. 'கிறிஸ்து நாதரால்

ரோமாபுரி வீழ்ச்சி யுற்றது, புத்தரால் இந்தியா வீழ்ச்சி யுற்றது!' என்று உலகப் பிரசித்தி பெற்ற ஒரு பெரியாரே கூறவேண்டுமாயின், எத்தகைய உணர்ச்சி ஏற்பட்டு வந்தது என்பதை நாம் யூகித்துக் கொள்ளக்கூடும். அந்த உணர்ச்சியுடன், 'உங்கள் தேகத்திலிருந்த நகைகளை யெல்லாம் அந்நியருக்குக் கொடுத்துவிட்டு இரும்பு விலங்குகளை அணிந்துகொண்டு இருக்கிறீர்களே, மூடர்களே!' என்று ஜனங்களைத் தட்டி யெழுப்ப ஆங்காங்கே பல தலைவர்கள் தோன்றி யிருந்தார்கள். வெறியூட்டும் எண்ணற்ற தேசீய கீதங்கள் லட்சக் கணக்கான குரல்களில் பாடப் பட்டன. நாடகங்கள் பல எழுதி நடிக்கப்பட்டன. சொற்பொழிவுகள், பத்திரிகைகள், கீதங்கள், நாடகங்கள் முதலிய பல வழிகளிலும், 'அரேபியா, எகிப்து, பாரசீகம், திபெத், பர்மா — அசப்ய ஜப்பான்கூட — விடுதலை பெற்றிருக் கின்றனவே! இந்தியா, நீ மட்டும் உறங்குகிறாயே!' என்று கோஷிக்கப்பட்டு வந்தது.

சுரேந்திர நாதர் காலத்தில் ஐ. ஸி. எஸ். பரீக்ஷை சம்பந்தமாக முதலில் ஆரம்பிக்கப்பட்ட அகில இந்தியக் கிளர்ச்சி பின்னால் ஒரு தேசீய இந்தியச் சங்கமாய்ப் பரிணமித்தது. சுரேந்திரரே முதல் ராஜீயக் கைதியாக வாழ்ந்து வழி காட்டவும் ஒரு சமயம் நேர்ந்தது. ஜனங் களும் தங்கள் தாழ்ந்த நிலைமையும் தரித்திரமும் மாற வேண்டும் என்று விரும்ப ஆரம்பித்தனர். அவர்களுக்கு ஓர் அளவு தன்னம்பிக்கை ஏற்பட்டது; யார் எதைச் செய்தாலும் பேசாமல் வரவேற்பது கூடாது என்று தெரிந்துகொள்ள ஆரம்பித்தனர். ஜனங்களின் மனநிலையில்

ஏற்பட்டுவந்த மாறுதலைக் காட்ட ஒரு திருஷ்டாந்தம் கூறுவோம். கல்கத்தா சர்வகலாசாலைக்கு வாழ்நாள் முழுதும் உழைத்து, கல்வி அபிவிருத்தியில் பேரபிமானம் கொண்டிருந்தவர் ஆஷுடோஷ் முகர்ஜி. அவர் தம் வீட்டில் பெரிய அதிகாரிகளைக் காணும் பொழுது சட்டையும் அங்கவஸ்திரமும் இல்லாமலே அமர்ந்து பேசுவது வழக்கம். உருவமோ குட்டி யானை போன்று இருக்கும். அதிகாரிகளுக்குப் பிடிக்கவில்லையானால் அங்கு வரவேண்டாமே என்று எண்ணிக்கொண்டார் போலும்! அவர் ஒரு சமயம் ரயிலில் முதல் வகுப்பில் பிரயாணஞ் செய்யும் பொழுது ஆசனத்தில் படுத்து உறங்கிக் கொண்டு இருந்தார். ஒரு ஸ்டேஷனில் இரண்டு ஐரோப்பியர் அந்த வண்டியுள் ஏறி, 'ஹூ தி டெவில் இஸ் திஸ்?' என்று சத்தமிட்டுப் பார்த்தனர். முகர்ஜி எழுந்திருப்பதாய்க் காணோம். ஆனால், பக்கத்தில் மாட்டப்பட்டிருந்த அவருடைய குடையை அந்த ஐரோப்பியர் எடுத்து வெளியே எறிந்துவிட்டு, தங்களுடைய சட்டைகளைக் குடை யிருந்த கொக்கியில் மாட்டி வைத்துவிட்டு, எதிர்ப் பக்கத்து ஆசனத்தில் அமர்ந்தனர். முகர்ஜி சாந்தமாக எழுந்திருந்து, அந்தச் சட்டைகளை எடுத்து ரயிலுக்கு வெளியே எறிந்துவிட்டு, மறுபடி படுத்துக்கொண்டார். காரணம் கேட்கப்பட்ட பொழுது, அவர் முன்னிலும் நிதானமாக, 'ஒன்றுமில்லை — அவை என் குடையை எடுத்துவரப் போயிருக்கின்றன!' என்றார். இதைப் போலவே, 'வாழ்வாவது மாயம் — இது மண்ணாவது திண்ணம்' என்று வேதாந்தம் பேசிக்கொண்டு இருந்த ஜனங்களுக்கு, 'இந்த மண்ணாய்ப் போகிற வாழ்வுக்கும் சில பொருள்கள் வேண்டும்; அவை சுதந்திரமும் சுய

மதிப்பும் இல்லாமல் கிடைக்க மாட்டா!' என்று உபதேசிக்கப்பட்டு, அவர்களும் விழிப்படைந்து, முகர்ஜியைப் போல் தன் மதிப்பும் தைரியமும் பெற்று வந்தனர்.

இந்தியச் சங்கம் தேசம் முழுவதற்கும் போதியதாயில்லை. அதுவே இந்திய தேசீய காங்கிரஸ் மகா சபையாக மாற்றி அமைக்கப்பட்டது. காங்கிரஸ் தோன்றிய பின் அதுவே தேசீய மறுமலர்ச்சியின் வளர்ப்புப் பண்ணையாக அமைந்துவிட்டது. 'அடிமை நாட்டில் அமைதி இருக்கவே முடியாது; அமைதி சுதந்திரத்தின் குழந்தையே அன்றி அதன் தாயல்ல' என்று பண்டித ஜவாஹர்லால் கூறியதை அது நாள்தோறும் நிரூபித்து வருகிறது.

வாகீஸ்வரி அச்சு நிலையம்,
சென்னை.

எல்லோரும் ஓர் குலம்
எல்லோரும் ஓர் இனம்
எல்லோரும் ஓர் நிறை

என்ற கொள்கையை நிருபணம்
செய்த சோவியத் ருஷ்யாவின்
முதல் தலைவரான

# 'லெனின்'

எழுதிய நூல்கள் யாவும் தமிழில் பல தொகுதிகளாக வெளியிட ஏற்பாடு செய்துள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

செ. திவான் M.A., M.Phil.,
சுஹைறு பதிப்பகம்
106 F,4A- திருவனந்தபுரம் ரோடு,
பாளையங்கோட்டை-627 002.
Phone: 0462 - 2572665

## தமிழ்ச் சுடர் நிலையம்

சென்னை.

Wrapper Printed at the Commercial Printing & Publishing House,
46, Muthumari Chetty Street, G.T., Madras.